815

1

மகேந்தர் சாணக்யா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAR 1955
MADRAS

No-112113

815

V2:51 Y7 L60
N54

112113

செப்பனிடுவோர் பெயர்

ஆகஸ்ட் 1992

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்

ஆகஸ்ட் 1992

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும் முகாமையாளர் கையொப்பம்

ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்

19/8/92

2

அருணு வெளியீடு : கஉ

பகதூர் வெள்ளை

பாஞ்சாலங்குறிச்சி வீர தளபதியின்

- வரலாற்றுச் சித்திரம் -

அமைத்தோர் :

கோ. நீ. அண்ணுமலை

பதிப்பாசிரியர் :

வித்துவான் ம. வி. இராகவன்

இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளி

தியாகராய நகரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

17 MAR 1955

MADRAS

அருணு பப்ளிகேஷன்ஸ்

தியாகராய நகரம் :: சென்னை-17

மாணவர்க்கான முதற்பதிப்பு: நவம்பர், 1954.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112113
EGMORE MADRAS
N54

முழு உரிமையாளர்கள்:

அருணா பப்ளிகேஷன்ஸ்

தியாகராயநகரம் - சென்னை-17

அச்சிட்டது: பாரதி பிரிண்டர்ஸ்—சென்னை-1

பதிப்புரை

நம் நாட்டின் விடுதலைப் போரைத் தொடங்கி அதற்குத் ...னையும் தன் துணைவரையும் காணிக்கையாகத் தந்தவன் ...ரபாண்டியக் கட்டபொம்மன்.

அவனால் செல்வமாக வளர்க்கப்பட்டுப் போரிலே தென்புற வாயிலின் தளபதியாக விளங்கிய அஞ்சா நெஞ்சன் வெள்ளையத் ...தேவன். காதலி சொக்கியுடன் மணம் புரிந்து இல் வாழ்வு வாழ ...வண்டிய நேரத்தில் வீரத்தை மணந்து அமரனாக விளங்கியவன்.

வரலாறுகள், நாடோடிப் பாடல்கள், தென்னாட்டுச் சீமை ... ஆங்காங்கே வாய் மொழியாக வழங்கும் கதைகள், ...ய பலவற்றையும் உள்ளத்திற் கொண்டு அழகு தவழும் ...செறிந்த வரலாறாக இதனை அமைத்தனர் ஆசிரியர்.

அது இப்போது மாணவர்க்கேற்ற முறையில் வெளி வருகி...து. நாட்டுப் பற்றும் கடமையுணர்வும் மாணவரிடையே ...ம் வீசச் செய்யும் ஓர் நயமான நூல் இது.

தமிழகத்தின் அறிஞர் பெருமக்கள் இம்முயற்சியினை வரவேற்று ஆதரவு அளிப்பர் என நம்புகிறோம்.

பதிப்பாளர்.

பொருளடக்கம்

1.	சேற்றில் மலர்ந்த செல்வன்	8
2.	மஞ்சு விரட்டின் மன்னன்	15
3.	திருடர்கள் நடுவில் தேவன்	22
4.	விளையாட்டுடன் வந்த வெள்ளையம்மாள்	25
5.	வேங்கையை வென்ற வீரன்	31
6.	திருமணம் பேசினர் தேவனுக்கு	41
7.	வந்தானையா வெள்ளைக்காரன்	45
8.	வஞ்சகம் வீழ்ந்தது ?	46
9.	புண்பட்ட மார்பு	57
10.	பஹதூர் வெள்ளை	61
11.	போர் முரசு	63
12.	போரும் முடிவும்	69
13.	வெள்ளைச்சாமி	78
14.	நிலைபெற்ற புகழ்	85

4

1. சேற்றில் மலர்ந்த செல்வன்

வீரம் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த காலம்! அதுதான் கி. பி. பதினேழாம் நூற்றுண்டின் கடைசிப் பகுதி. அன்றைய தென்னுட்டுச் சரித்திரம் இந்திய நாட்டின் சரித்திர ஏடுகளுக்கிடையில் ஒளியுடன் திகழும் ஒரு பொன்னேடாகும். அன்றுதான் இந்நாட்டின் மானங் காத்த, திக்கெட்டும் புகழும் ஜெக வீரபாண்டியக் கட்ட பொம்மு, தென் பாண்டிப்பகுதியை அரசாண்டு வந்தான். இந்தக் கட்டபொம்முவின் உடன் பிறந்தவனே உலகம் மெச்சும் ஊமைத்துரை! இவ்விருவரது கீர்த்திக்கும் துணையாக விளங்கியவன் வெள்ளையத் தேவன். கட்ட பொம்முவின் தலைநகரமான பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்த போர்வீரர்களிலே, ஈடற்றுவிளங்கித் 'தென்னுட்டுப் போர்ப்புலி' என்று போற்றப் பட்டவனும் இதே வெள்ளையத் தேவன்தான். இம் மாவீரனைத்தான், தமிழகத்தார். அன்றுமுதல் இன்றளவும் பஹதூர் வெள்ளை என்று பெருமையுடன் அழைக்கின்றனர்.

வீர மறக் குலத்தோரின் வழித் தோன்றல் வெள்ளையத்தேவன்; மறவர்குல மாணிக்கமான மங்களத் தேவனின் மகன். இவன் சிறு குழந்தையா யிருந்தபோது இவனுடைய அன்னை ஒருநாள் தான் காட்டிற்குச் சென்றபோது தன்னுடன் இவனையும் எடுத்துச்சென்றிருந்தாள். அப்படிச் சென்றவள் குழந்தையை ஒரு மர நிழலில் படுக்கவைத்துவிட்டு விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். காட்டுக்குள் சென்றிருந்தவள் நெடுநேரமாகியும்

குழந்தை யிடத்திற்குத் திரும்பி வரவில்லை. குழந்தையோ சற்று நேரம் படுத்திருந்தபின் மெதுவாக அங்குமிங்கும் ஊர்ந்து சென்று விளையாடத் தொடங்கிற்று. நிரம்பத் துடிதுடிப்பான குழந்தையாகையால் அவ் விதமே ஊர்ந்து ஊர்ந்து நீண்ட தூரம் போய்விட்டது. குழந்தையை அதன் அன்னை விட்டுச் சென்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் சேறுஞ் சகதியும் நிறைந் திருந்த சிறு பள்ளம் ஒன்று இருந்தது. தவழ்ந்து சென்ற குழந்தை அந்தச் சேற்றில் சிக்கிக் கொண்டுவிட்டது. அதற்கு மேல் அதனுல் எங்கும் போகவோ, அல்லது அதைவிட்டு வெளியே வரவோ முடியவில்லை.

அடர்ந்த மரங்கள் அணியணியாகச் செழித்து ஓங்கி வளர்ந்து நின்ற அந்தக் காட்டிலே எங்கிருந்தோ சில வேட்டை நாய்கள் ஓடி வந்தன. அவை, சேற்றில் அகப் பட்டுத் திணறும் குழந்தையைக் கண்டதும் குரைத்துக் கொண்டே நின்றன. நாய்கள் மிகவும் அறிவு நிரம் பியவை. ஆகையால், சேருஞ் சகதியும் நிறைந்திருந்த பள்ளத்தில் சிக்கிய குழந்தையைக் கண்டதும், அங்கு நின்றபடியே உரக்கக் குரைத்து அதனைத் தம் சொந்தக் காரருக்குத் தெரிவித்தன.

அன்றையத் தினம் பாஞ்சாலங் குறிச்சியின் மன்னனுன வீரபாண்டியக் கட்டபொம்மன் அந்தக் காட்டின் அப் பகுதியிலேயே வேட்டையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய வேட்டை நாய்களே குழந்தையைக் கண்டு குரைத்தவையாகும். நாய்களைத் தொடர்ந்து அவற்றின் பின்னுல் வந்துகொண்டிருந்தான் கட்டபொம்மன், சகதியில் சிக்கிக்கொண்டு ஒரு குழந்தை தவிப்பதையும், தன் நாய்கள் அதைக்கண்டு குரைப்பதையும் பார்த்து அதிசயித்தான், "காட்டிலே குழந்தை எவ்வாறு வந்தது ? எப்

படி அது சகதியில் சிக்கியது?'' என்பதைப் பற்றியெல்லாம் அவன் சிந்திக்கவில்லை. அல்லது அதை உடனே சென்று தூக்கவும் இல்லை. ஆனால் அது அஞ்சி அலறி அழாமல் வேறென்னவோ செய்து கொண்டிருந்ததைப் பற்றித்தான் அவன் சிந்தனை சென்று கொண்டிருந்தது. தூர நின்ற படியே கண்ணிமைக்காமல் சற்று நேரம் அதனையே பார்த்தான். அந்தக் குழந்தை ஏதோ ஒன்றை எடுப்பதற்காக மிகவும் ஊக்கமுடன் தன் சின்னஞ்சிறு கைகளால் முயன்று போராடிக் கொண்டிருப்பது தெரிந்தது. பெரிதும் வியப்படைந்தான். அவன் கண்களையே அவனால் நம்பமுடியவில்லை. பேராச்சரியத்துடன் அப்படியே திகைத்து நெடுநேரம் வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டே நின்றான்; பச்சிளம் பாலகன் ஒருவன் அவ்வளவு ஊக்கமும் தன்னம்பிக்கையும் அஞ்சா நெஞ்சமும் உடையவனாக விளங்குவதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான்; உள்ளம் பூரிக்க உவகை மேலிட்டவனாக ஓடோடியும் போய்ச் சகதியில் சிக்கியிருந்த அக்குழந்தையைத் தூக்கி முத்தமிட்டான்.

அக் குழந்தையைக் கண்டதும் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட அன்புப் பெருக்கிலே அது சகதியில் கிடந்ததையே கட்டப்பொம்மன் மறந்து விட்டான்; ஆசைப் பெருக்கினால் மாறிமாறிக் குழந்தையை மார்போடணைத்து மகிழ்வுடன் முத்தமிட்டான்; தோளிலே தூக்கிவைத்துக் கூத்தாடினான். அக்குழந்தையும் தன்னை அவ்வளவு அன்புடன் நேசிப்பவனைக்கண்டதும், பொக்கைவாய்ப் புன்னகை காட்டிச்சின்னஞ்சிறு கால்களால் கட்டபொம்மனை உதைத்துக்கொண்டே சிரித்தது. அப்போதுதான் தன் ஆடையெல்லாம் ஒரே சகதியாய்விட்ட அலங்கோலத்தை அவன் உணர்ந்தான். அதற்குள் அவனுடன் வந்த பரிவா

ரங்களும் அங்கே வந்து சேர்ந்தனர். தம் தலைவன் நிற்கும் நிலையைக்கண்டு வியப்பும் திகைப்பும் உடையவர்களாக. அவர்களும் மெய்ம்மறந்து நின்றனர்.

"இந்தக் குழந்தை எவ்வளவு அறிவும் ஆற்றலும் உடையது தெரியுமா? இதன் முகச்சாயலும் சுறுசுறுப்பும் வருங்காலத்தில் மாபெரும் வீரனாகத் திகழக்கூடியவன் இவன், என்பதைக் காட்டுகின்றன பாருங்கள்" என்று கூறித் தான் கண்டெடுத்த குழந்தையைப் பிறர்க்கும் காட்டி மகிழ்ந்தான் கட்டபொம்மன். பெறுதற்கரிய பெருஞ் செல்வத்தைப் பெற்றுவிட்டவன் போன்ற பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டான் அவன்.

"குழந்தை நன்றாகத்தா னிருக்கிறது! யார் குழந்தை? எங்கே இருந்தது? பாவம்! அதன் தாய்தந்தையர்கள் எங்கே? காணவில்லையே! அவர்கள் தேடமாட்டார் களா?" என்றான் கூட்டத்தில் ஒருவன்.

"ஆமாம்! என் மகிழ்ச்சியில் மறந்தே விட்டேன்! சகதியில் கிடந்து விளையாடிக் கொண்டிருந்தது. இதற்கு உரியவர்கள் யாராவது பக்கத்தில்தான் எங்காவது இருப்பார்கள். பாவம்! குழந்தையைக் காணாது அவர்கள் தவித்துக் கொண்டிருக்கலாம். உடனே போய்த் தேடி ஆறுதல் சொல்லி அழைத்து வாருங்கள்" என்று தன் ஏவலாளர்களை நாலாபுறமும் ஏவினான் கட்டபொம்மன். அவர்களும் ஆளுக்கொருபுறமாகச் சென்று தேடினர்.

அந் நேரத்திலே "குழந்தையை யாராவதுவந்து வாங்கிக் கொள்வார்களோ?" என்ற கவலையே கட்டபொம்மனை வாட்டியது. உண்மையில் அதைத் திருப்பித் தருவதற்கு அவன் விரும்பவே இல்லை. "அநாதைக் குழந்தை

யாக இருந்துவிட்டால் நாமே வளர்க்கலாமே'' என்று ஒரு கணம் எண்ணவும் செய்தான். தன் ஆட்கள் கொண்டுவருஞ் செய்தியை எதிர்நோக்கிக்கொண்டே குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுவதில் முனைந்தான் கட்டபொம்மன். அதுவும், சற்றேனும் அஞ்சாமல் கட்ட பொம்மனின் பளபளக்கும் ஆபரணங்களையும் ஆயுதங் களையும் தொட்டுப் பார்த்துக் கொண்டே, கலகலப்புடன் கன்னங்குழியச் சிரித்து விளையாடியது.

சென்றவர் வந்தனர்; "யாரையுங் காணவில்லை'' என்ற னர். குழந்தையை வளர்க்க 'நான் நீ' எனச் சில இரக்கங் கொண்டோர் முன் வந்தனர்.

"என் அரண்மனையிலேயே இவன் வளரட்டும். இவ னிடம் என்னையறியாமலேயே எனக்கொரு பாசம் உண் டாய் விட்டது'' என்று தன் வீரர்களிடம் கூறிவிட்டுப் பாஞ்சையை நோக்கிக் குழந்தையுடன் புறப்பட்டான் கட்டபொம்மன்,

"அநாதைக் குழந்தைக்குக் கிடைத்த அதிர்ஷ்டத் தைப் பார்த்தீர்களா ? அரண்மனைச் செல்வமாக வளரப் போகிறது ! ஆனால், அதை ஒருமுறை பார்த்தவர் யாருக் குமே அதை விட்டுப்பிரிய மனம் வராது. என்ன அழகு! என்ன சுறுசுறுப்பு!'' என்று பலவாறாகப் பேசிக்கொண் டே வீரர்களும் தம் தலைவனைத் தொடர்ந்தனர்.

இவ்வாறாக, எதிர்பாராத நிலைமையில் கட்டபொம் மனின் அன்பிற்குப் பாத்திரமான வெள்ளையத்தேவன் அரண்மனையிலேயே சீருஞ் சிறப்புமாக ஓர் இளவரசன் போலவே வளர்ந்துவந்தான். சொந்தப் பெற்றோரினும் பன்மடங்கு அன்புகாட்டிய கட்டபொம்மனின் அன்

பிலே அக் குழந்தை யுள்ளமும் தாய்முகம் மறந்து கட்டுண்டு கிடந்தது.

அது நடந்து சிலநாட்களாயின. தன் அருமை மைந்தனை உயிருடன் பறிகொடுத்த தாய் அழுதாள், கதறினாள், புலம்பினாள். மங்களத்தேவனும் மறவர் பலருடன் சென்று காடெல்லாம் அணு அணுவாக ஆராய்ந்து தேடினான். குழந்தையைக் காணாது கலங்கினான். தன் மனைவியின் எச்சரிக்கைக் குறைவினால் நேர்ந்த பெரும் இன்னலை நினைந்து நினைந்து உள்ளஞ் சோர்ந்தான். உணவும் உறக்கமுமின்றி அவனும் அவன் மனைவியும் அதே கவலையால் மனம் வெதும்பி வாடினர். குழந்தை போய்விட்டது என்று நினைக்க நினைக்க உலகமே அழிந்து விட்டது போன்று பரிதவித்தனர். "இழக்கக் கூடிய செல்வமா ? பாவி ! உயிருடன் பலிகொடுத்துவிட்டேனே !" என்று உயிர் சோரத் துடித்தாள், பெற்றதாய் !

அந்த நிலையில் பாஞ்சைப்பதியிலிருந்து திரும்பிய ஒருவன், காட்டிலே கட்டபொம்மன் ஒரு குழந்தையைக் கண்டெடுத்த கதையையும், அஃது அரண்மனையிலே ஆடம்பரமாக வளர்ந்து வரும் சிறப்பையும், அதைக்கண்டு அவ்வூரே வியப்புக் கடலில் மூழ்கியிருக்கும் விந்தையையும் தேவரிடம் வகை வகையாகக் கூறினான்.

அதனைக் கேட்ட தேவரும் அவர் மனைவியும் பாஞ்சைக்கு ஓடோடியும் சென்றனர்; அங்கே பாராளும் மன்னன் மடியிலே தவழ்ந்து விளையாடுந் தங்கள் பச்சிளம் பாலனைக் கண்டனர்.

தம் மனைவியின் அறியாமையைக் கூறித் தங்களை மன்னித்துத் தங்கள் மகனைத் தருமாறு வேண்டினார் தேவர்.

கட்டபொம்மனே "இவன் இங்கேயே வளரட்டும் தேவரே! உம் மகன் உம்மிலும் பெருவீரனாக விளங்கப் போகிறான். அவனைக் கண்டதும் என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேன். பெற்றெடுத்த பாசம் உங்களுக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால் என் வேண்டுகோளை நீர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்றான்.

மாண்டுபோனான் என நினைத்த தங்கள் மகன் மன்னவன் மடியிலே வளர்வதைக் கண்ட தேவர், அதனை மறுத்துக்கூற இயலாமல் திணறினார். என்றாலும், இறுதியில் மன்னவன் எண்ணமே நிறைவேறியது.

வெள்ளையத்தேவனும் அரண்மனையிலேயே வளர்ந்து வந்தான்.

அரண்மனைச் செல்வமாக வளர்ந்த வெள்ளையத் தேவன் இளைஞனாயிருந்தபோதே வீரக்கலை நிரம்பியவனாக விளங்கினான்; இளவேங்கையைப் போலத் திகழ்ந்தான். இளவட்டச் சீரான விளையாட்டுக்களிலும், போர்ப்பயிற்சிகளிலும் மிகவும் வல்லவன் என்று அவனை அனைவரும் புகழ்ந்து கொண்டாடினர்.

2. மஞ்சு விரட்டின் மன்னன்

சிரித்த முகம்; நிமிர்ந்த நடை; கம்பீரமான தோற்றம் இவைகளுடன் அஞ்சா நெஞ்சம் படைத்த ஆஜானுபாஹுவே வெள்ளையத் தேவன். சேவற் சண்டைகளில் அவன் சேவல்தான் எப்பொழுதும் வெற்றிபெறும். மஞ்சு விரட்டுக்களில் எவ்வளவு வேகமாக ஓடக்கூடிய முரட்டுக் காளையாக இருந்தாலும் அவனிடம் அதன் ஜம்பம் சாயாது! எப்படியும் அதைத் துரத்திப் பிடித்து நிறுத்தி அவன் வெற்றிபெற்று விடுவான். கூரிய கொம்புகளுடன் பாய்ந்து

எதிர்த்தாரனேவரையும் குத்திப் பிளந்து கொல்லக்கூடிய காளையானுலும் தந்திரமாகவும், லாவகமாகவும் தாவி, அதையும் மடக்கி மாவீரனுக வருவான் அவன்.

வெள்ளையத் தேவனுக்குப் பதினெட்டாவது வயது நடந்துகொண்டிருந்தபோது ஒரு சமயம் சாயல்குடி என்ற கிராமத்திலுள்ள 'சீனி மறவன் பொட்டல்' எனும் இடத்தில் ஒரு மஞ்சு விரட்டு நடைபெற்றது. அக் காலத்தில் மஞ்சு விரட்டு தெற்குச் சீமையின் பிரசித்தி பெற்ற பெரிய வீர விளையாட்டுக்களில் ஒன்று. இன்றுங் கூட இராமநாதபுரம் ஜில்லாவின் சில பகுதிகளில், அறுவடை காலம் முடிந்தபின், தை மாதத்துக்கு மேல் மஞ்சுவிரட்டு நடைபெற்று வருவதைக் காணலாம்.

சாயல்குடியில் நடைபெற்ற மஞ்சு விரட்டுக்கு ஆயிரத் துக்கும் மேற்பட்ட காளைகள் வந்திருந்தன. அன்றுவரை எவரும் அணுக நடுங்கும்'சீனிக்காளை'என்ற பயங்கரமான காளைமாடு ஒன்றும் ஏராளமான அணிகள் பூட்டப்பட்டு அங்கு கொண்டு வரப்பட்டிருந்தது. அம் மாட்டை அன்று பிடித்து நிறுத்துகிறவர்கள் யாரோ அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு கொடுப்பதென்றும் அதற்குரியவர் கள் சவால் விட்டிருந்தனர்.

அந்தச் சவாலைக் கேட்டு ஏராளமான மாடுபிடி வீரர்கள் 'சீனிக்காளையைப் பிடித்தே தீருவோம்' என்ற வீருப்புடன் அங்கு வந்து குழுமியிருந்தனர். பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூட்டமும் விளையாட்டைப் பார்த்து மகிழ்வதற்காகத் திரண்டிருந்தது. மாட்டு வண்டிகளிலும், பந்தையச் சாரட்டுக்களிலும் ஏராளமானவர்கள் ஏறி நின்று வேடிக்கை பார்த்தனர். குறிப்பிட்ட நேரம் வந்ததும், கொட்டு முழக்குடன் மாடுகள் பலவும் கட்ட

விழ்த்து விரட்டடப்பட்டன. மாடுபிடிக் கென்றே வள மாகத் தீனியிட்டுக் கொழுக்க வைக்கப்பட்டிருந்த காளை கள் ஒவ்வொன்றும் பயங்கரமாக முக்காரமிட்டுக் கொண்டே பாய்ந்து சென்றன.

வல்லமையாளர்கள் பலர் அகப்பட்ட மாடுகளை யெல்லாம் அப்படியப்படியே அற்புதமாகத் தாவிப்பிடித்து நிறுத்தினர். அவைகளுக்குப் பூட்டப்பட்டிருந்த அணி களையும் ஆடைகளையும் பறித்துக்கொண்டு "தூ! ஓடிப்போ!" என்று எக்களிப்புடன் விரட்டி விட்டனர். அதைப்பார்த்துக் கூடி நிற்கும் மக்களும் மகிழ்வுடன் கைதட்டினர்; ஆரவாரித்தனர். மாடு பிடிப்பவர்களை மேன் மேலும் ஊக்கி விட்டனர். ஆனால், அப்படி நிகழ்ந்த ஆரவாரங்களுக்கிடையே ஒருவனை மட்டும் காண வில்லை! அவன் யார்? அவன்தான் நம் வெள்ளையத் தேவன். அவ்வளவு ஆரவாரங்களுக்கிடையிலும் அவன் எங்கேயோ ஒதுங்கி நின்று விட்டான்! 'மஞ்சு விரட்டுக் களிலே இணையில்லா வீரனைப் பவனிவரும் மாவீரன் வெள்ளையன் எங்கே?' எங்கே?' என்று அனைவர் கண் களும் தேடித் தவித்தன. அவன் அதுவரையும் மஞ்சுவிரட் டிலே கலந்து கொள்ளாமலிருந்தது ரஸிகர்களுக்கெல்லாம் 'சப்' பென்றிருந்தது.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் கழிந்தது. மிகப்பல மாகக் கொட்டுக்கள் முழங்கின. கூடியிருந்த மக்கள் "சீனிக்காளை வருகிறது! சீனிக்காளை வருகிறது!" என்று ஆரவாரத்துடன் கூவினர். கட்டுத்தொழுவிலிருந்து வெளி யிற் கொண்டுவரப்பட்டவுடனேயே ஏகப்பட்ட கும்பல் திரண்டு நின்று அம் மாட்டைக் கவனித்தது. அப்போது நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களை எழுதி முடியாது! அதே

நேரத்தில் எங்கிருந்தோ வெள்ளையத் தேவனும் வந்தான். எங்கோ மூலையில் முண்டாசுக் கட்டுடன் வெற்றிலையை மென்றுகொண்டே நின்றவன், திடீரென விடி வெள்ளி போன்று வெளியே கிளம்பினன். அவன் வரவு கண்டதும் மற்றொரு பிரமாண்டமான மகிழ்ச்சி ஆரவாரம் மக்கட் கடலிடையே பொங்கி யெழுந்தது.

"வாராண்டா வாராண்டா வெள்ளையத் தேவன் வாலைப்பிடித்து மடக்கிடவே" என்று சிலர் உள்ளக் களிப்புடன் பாட்டுக்கள் பாடவுந் தொடங்கினர். நெருப்புக் கக்குங் கண்களுடனும், திமிர்கொண்ட நடையுடனும், கயிறு உருவி விடப்பட்ட சீனிக்காளை முறுக்குடன் நின்று கூட்டத்தை ஒருமுறை முறைத்துப் பார்த்தது.

மாடு பிடிக்கவென்று கச்சை கட்டிக்கொண்டு நின்றவர்களிலே பலர் அந்த முறைப்பைக் கண்டதுமே ஒதுங்கிவிட்டனர். சிலர் மட்டும், ஆசை முன்னே தள்ள அச்சம் பின்னே இழுக்க, அலைமோதும் மனத்துடன்நின்று கொண்டிருந்தனர். துணிச்சல் நிறைந்த சிலர் அதனை நெருங்கவும் முயன்றனர். அவ்வளவுதான்! சீறிப் பாய்ந்தது சீனிக்காளை. நெடுவாலைத் தூக்கிக்கொண்டு வீரர்களின் கூட்டத்திலே புகுந்து வெறிகொண்டதுபோல அனைவரையுந் தாக்கியது. அதன் கால்களால் மிதிக்கப்பட்டும், கூரிய கொம்புகளால் குத்தப்பட்டும், தூக்கி எறியப் பட்டும் வீரர்கள் பலர், 'ஐயோ! அம்மா!' என்று கதறினர். வீரர்களின் உடல்களினின்றும் வழிந்த இரத்தத்தால், அந்தத் திடல் முழுவதும் செந்நிற மலர்களால்அலங் கரிக்கப்பட்டதுபோன்று விளங்கியது. ஒவ்வொருவராக வீரர்கள் பலரும் அதன் வெம்மைக்கு ஆற்றுது பின்

னடைந்தனர்; வெற்றியை மறந்து தம் உயிரையும் உடலையும் பேணுவதிலேயே கவனஞ் செலுத்தினர்.

அவ்வாறு, அனைவரையும் கதிகலங்கச் செய்தபின் சினிக்காளையோ தலைநிமிர்ந்து நின்றது; பலத்த குரலில் முக்காரமிட்டது. 'யார் இன்னமும் பாக்கியிருக்கிறீர்கள் ?' என்றுஅறைகூவி அழைப்பது போலிருந்தது, அது நின்ற பயங்கரமான காட்சி.

சினிக்காளையின் திமிர்நிறைந்த போக்கையும். அட்ட காசங்களையும் கவனித்துக்கொண்டே ஒருபுறம் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தான் வெள்ளையத்தேவன். அதன் போக்கை ஒருவாறு உணர்ந்தபின் மெதுவாக அதை நெருங்கிப் பாய்ச்சல் காட்டினன்; பதுங்கிப் பதுங்கி எச்சரிக்கையுடன் அதைக் கிளறிவிட்டு அலைக்கழித்தான். சினிக்காளையும் ஒவ்வொரு முறையும் ஆவேசத்துடன் பாய்ந்து பாய்ந்து ஏமாற்றமும் சோர்வும் அடைந்தது; அத்துடன். சினமுங்கொண்டது.

இறுதியாக, அந்தக் காளையை ஒரு பனைமரத்துக்குப் பக்கத்தில் வருமாறு தந்திரமாக மடக்கினன் வெள்ளையத் தேவன். 'அதோ சினிக்காளை பிடிபட்டுவிட்டது!' என்று கூவினர் மக்கள். ஆனல் அந்தப் பொல்லாத காளையோ அவனிடம்அகப்படாமல்சீறிப்பாய்ந்துகொண்டேநின்றது. அவனும் அதன் பாய்ச்சல்களுக்கு அகப்படாமல் மிகவும் தந்திரமாக நழுவிக்கொண்டான். அப்படியே, இரண்டு நாழிகைகளுக்கு மேல் கழிந்தன. அவ்வாறு. நெடு நேரம் மிகவும் கொடூரமாக வீரப்போர் புரியும் மனிதனையும், மிருகத்தையும் குழுமியிருந்த மக்கள் கண்ணிமைக்காது பார்த்த வண்ணம் மெய்ம் மறந்திருந்தனர். பெருங் கூட்டம் என்ருலும் ஊசி விழும் ஓசையும் கேட்கும்

அளவு அமைதி காணப்பட்டது. இடையிடையே மக்களின் கைதட்டலால், பலத்த ஆரவாரமும் ஏற்பட்டது.

திடீரென, வெள்ளையத்தேவன், தன் அரும்பு மீசையை இடது கையினால் தடவிக்கொண்டான். அவன் கண்கள் செவ்வென்று சிவந்தன. காளையை நோக்கிக் கம்பீரத்துடன் தாவிச் சென்றான். அவ்வளவு தூரம் அது பொறுக்குமா ?

அதுவும் மிகுந்த சீற்றத்துடன் அவனது மார்பை நோக்கிப் பாய்ந்தது. 'ஐயோ! வெள்ளையன் தொலைந்தான்' என்று மக்கள் எண்ணினர். அவனோ மின்னல் வேகத்திலே ஒதுங்கிப் பனைமரத்தின் அடிப்பக்கமாகப் பதுங்கினான். சீறி எழுந்த சினிக்காளையும் 'இவனை இதோ தீர்த்து விடுகிறேன்' என்பதுபோல ஆவேசத்துடன் அவனை நோக்கி ஓடியது. மரத்தின் ஒரு பக்கத்தில் வெள்ளையத் தேவன், அடுத்த பக்கத்தில் சினிக்காளை; ஒருவரை ஒருவர் வெற்றி கொள்ளும் ஆவேசத்துடன் இருவரும் பம்பரம்போலப் பனைமரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தனர். மனத் துணிவோடும், தந்திரமாகவும் காளையின் கூரிய கொம்புகளிரண்டையும், அது எதிர்பாராத விதமாகத் தன் வலிமை கொண்டமட்டுங் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் வெள்ளையத்தேவன்.

மாடு திமிரியது; மற்போரில் குதிப்பது போலக் குதித்தது; மண்ணைக் கால்களால் பறித்து எங்கும் புழுதிப் படலத்தை எழுப்பியது. ஆயினும் அவ் வீராதி வீரன் வெள்ளையத்தேவன், அவன் பிடித்த விடாப்பிடியை மட்டும் விட்டுவிடவில்லை. சக்கர வட்டமாக மரத்தைச் சுற்றிச் சுற்றி அதை இழுத்தடித்தான். அப்படி

யாக, நீண்ட நேரம் நடைபெற்ற கடும் போராட்டத்துக்குப்பின்னர், காளை சிறிது களைப்படையத் தொடங்கிற்று. அவன் கைகள் பனை மரத்தில் பலமாக உராய்ந்திருந்தன. அவற்றிலிருந்து ரத்தம் வடியவும் தொடங்கியது. மார்புச் சதையும் நசுக்குண்டு ரத்தம் வெள்ளமாகப் பெருகியது. மாட்டின் வாயிலிருந்து வெண்மையான நுரை தள்ள ஆரம்பித்தது. அதன் உடல் வெடவெட வென்று ஆடத் தொடங்கிற்று. கண்களோ, கோபத்தினுலும் ஆற்ருமையினுலும் சிவந்து நீர் சொரிந்துகொண்டிருந்தன. அந்தப் பயங்கரமான காட்சியைப் பார்த்த மக்கள், இறுதியில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை நிதானிக்க மாட்டாதவர்களாகத் தத்தளித்துத் தடுமாறி நின்ருர்கள். மாடோ மனிதனே, அந்நேரத்திலும் விட்டுக் கொடுத்துப் பின்வாங்குவதாகத் தெரியவில்லை!

தக்க தருணத்தை எதிர்பார்த்து நின்ற வெள்ளையத் தேவன், சமயம் வாய்த்ததுந் துணிந்து, மாட்டின் ஒரு கொம்பைக்கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இடது புறத்திற் சாடிப் பாய்ந்தான். ஒரு கொம்பு எதிர்பாராத விதமாக விடுதலை பெறவே, மாடும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வரும் நிலையிலிருந்து விடுபட்டுச் சற்றுப் பின் வாங்கியது, மீண்டும் அதன் எதிரியின் மேற் பாய்வதற்காக. ஆனல் வெள்ளையத்தேவன் விர்ரென்று விலாப் புறத்தில் பாய்ந்து மாட்டின் திமிள்மீது விழுந்து அணைத்துக்கொண்டே, இடக் கரத்தால் அதன் வாலைப் பலங் கொண்ட மட்டும் ஒடித்து இழுத்துக்கொண்டான். எவ்வளவு துள்ள முடியுமோ அவ்வளவும் துள்ளிப் பார்த்தது காளை. அவனே விட்டபாடில்லை. இறுதியில் சீனிக்காளை மிகவும் சோர்ந்து விட்டது. மூச்சுத் திணறி, வாயில் நுரை தள்ள, கால்கள் தள்ளாட, மயங்கிக் கீழே விழுந்து விட்டது.

மக்களின் உற்சாகம் கரை புரண்டு காணப்பட்டது. 'பலே! வெள்ளையத்தேவன்!' என்று அனைவரும் பல்லாண்டு பாடினர். சிறுவர்கள் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தனர். அப்போது வெள்ளையத்தேவனும் அந்தக் காளைக்குப் பூட்டியிருந்த ஆடை அணிகளை யெல்லாம் பறித்துக்கொண்டு கம்பீரமாக எழுந்து வந்தான். மக்கள் வாழ்த்தொலி விண்ணதிர முழங்கியது. வெள்ளை யத்தேவனும் அவன் வீர மார்பிலே வடிந்தோடும் ரத்தத் தையும், களைப்பையும் பொருட்படுத்தாமல் ஒய்யாரமாகப் பணயத் தொகையைப் பெறுவதற்கு வந்துகொண்டிருந் தான்.

சீனிக் காளையை வென்ற அவன் தீரத்தையும் சாகசத் தையும் அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர்.

3. திருடர்கள் நடுவில் தேவன்

தென் தமிழ் நாட்டில், அந்நாளின் இரவு நேரங்களில் ஆடு, கோழிகளைத் திருடுங் கூட்டத்தினர் அங்கங்கே பரவலாக மலிந்திருந்தனர். இன்றுங்கூட அத்தகைய திருட்டுக்கள் பலவிடங்களிற் சாதாரணமாக நிகழ்கின்றன என்று நாம் கேட்கின்றோம். கட்டபொம்மன் காலத்தில், தெற்குச் சீமையைப் பகைவர்களும் பஞ்சமும் இடை விடாது வாட்டி வந்தமையால் சர்வசாதாரணமாக அத் தகைய சிறு சிறு திருட்டுக்களும் நிகழ்ந்து வந்தன. வெள்ளையத்தேவன் மஞ்சு விரட்டில் வெற்றி பெற்ற சில நாட்களுக்குப் பின், இம்மாதிரியான திருடர்களிடம் ஒரு முறை சிக்க நேர்ந்தது. சற்றேறக்குறைய முப்பது திருடர்கள் ஓர் ஆட்டுப்பட்டிக்குள் நுழைந்து ஆடுகளைத் திருடிக்கொண்டிருந்தனர். எங்கோ போவதற்காக அவ் வழியில் அவ்வேளையில் வந்த வெள்ளைத்துரை ஆட்டுப்

பட்டிக்கு அருகே காவற்காரன் இல்லாதிருப்பதைக் கண்டு ஐயமுற்ருன்.

எனவே ஒரு மூலையில் ஒளிந்திருந்து கூர்மையாகக் கவனித்தான். சில நிமிஷங்களுக்கெல்லாம் சிலர் ஆடுகளைத் தோளிற் சுமந்து கொண்டு பட்டிக்குள்ளிருந்து வெளியேற முயல்வது அந்த நள்ளிரவிலும் நன்கு தெரிந்தது. பட்டியைக் காவல் புரியும் நாய்களையுங் காணவில்லை. முன்னெச்சரிக்கையுடன் அவைகளுக்கு வாய்க் கட்டுப் போட்டுவிட்டிருந்தனர் திருடர்கள். பட்டியில் காவல் புரிந்தவனையும் கால் கைகளைக்கட்டி வாயில் துணியை அடைத்து ஒரு மூலையில் தூக்கிப்போட்டு விட்டிருந்தனர். எனவே நிதானமாகவே தங்கள் காரியங்களை அவர்கள் செய்து கொண்டிருந்தனர். ஏராளமானவர் பட்டிக்குள் இருப்பதையும், மிகவும் சாவதானமாகவே அவர்கள் திருடிக்கொண்டிருப்பதையும் கண்ட வெள்ளையத் தேவன் பட்டியின் வாசலில் ஒதுங்கி, வேற்கம்பைத் தயாராக வைத்துக்கொண்டு காத்து நின்ருன். ஆட்டுப் பட்டியின் வாயில் மிகவும் குறுகலாக இருக்கும். ஆகையால் அவன் ஒளிந்திருப்பதை உள்ளிருப்பவர்கள் தெரிந்துகொள்ளவே முடியாது.

திருடர்கள் ஆடுகளை ஒவ்வொன்ருகத் தூக்கிக் கொண்டே அக்குறுகலான வாயிலின் வழியாக மார்பினுல் ஊர்ந்து வெளியே வரத் தொடங்கினர். எதிர்பார்த்துக் கொண்டிருந்த வெள்ளையத்தேவனே அத் திருடர்கள் ஒரு சிறிதும் எதிர்பாராத விதமாகத் குபீல் எனப் பாய்ந்து வேற் கம்புகளால் அவர்களிற் சிலரது மார்பைப் பிளந்தான்; சிலரை அவனிடமிருந்த கரணைக் கம்பினுற் கால் கைகளில் அடித்து முடமாக்கினுன். வலி பொறுக்க முடியாத அடிபட்டவர்கள் உடனே பெரும் ஓலமிடத்

தொடங்கினர். அது கண்ட வெள்ளையத்தேவன் சட்டெனப் பட்டியின் வாயிலை அடைத்துவிட்டுப் பட்டிக்குள் குதித்து, அங்கே எஞ்சிநின்ற திருடர்களை ஆவேசத்துடன் தாக்கினான். ஒரு சிறிதும் எதிர்பாராத நிலையில் அந்தத் தாக்குதல் நேரிடவே திருடர்கள் சிதறி ஓடப்பார்த்தனர். தேவனே மிகவும் தந்திரமாக அவர்கள் வெளியே தாவிக் குதித்து ஓடிவிடாதபடி வழியை முன்னரே அடைத்து விட்டிருந்தான். எனவே, உள்ளே அகப்பட்டுக் கொண்டவர்கள் தப்பிச் செல்ல வழியின்றிப் போனதால், தங்களிடமிருந்த தடிகளாலும் ஆயுதங்களினாலும் ஆவேசமாகப் போராடினர். நீண்டநேரப் போராட்டத்திற்குப் பின்னர் திருடர்கள் அனைவரையும் வென்று, அவர்களைக் கட்டியும் போட்டு விட்டான் வெள்ளையத் தேவன்.

அதன் பின்னர், பொழுது விடியும்வரை அவன் அந்த ஆட்டுப் பட்டியிலேயே தங்கினான். விடிவதற்குச் சற்று நேரம் முன்பாக வேறு சில கிராமங்களுக்குச் செல்லும் மக்களும் அந்த வழியாக நடந்து வந்தனர். அப்படி வந்தவர்கள் பட்டியின் வாயிலில், வெள்ளையத்தேவன், ரத்தம் தோய்ந்த வேற்கம்புடன் நிற்பதைப் பார்த்துத் திடுக்கிட்டனர்; அவனது உடலெங்கும் சல்லடைக் கண்களாகத் தொளைக்கப்பட்டிருப்பதையுங் கண்டு வருந்தினர். வெள்ளையத்தேவனே சிரித்துக்கொண்டே "இதோ பாருங்கள்; முப்பது எருமைகளைக் கட்டிப் போட்டிருக்கிறேன்; பிடித்துக்கொண்டு போய் வேலை வாங்குங்கள்" என்று, வேடிக்கையாகச் சொன்னான்.

வந்தவர்கள் பட்டிக்குள் நுழைந்து பார்த்தனர். மிகவும் அதிசயமாக இருந்தது அங்கிருந்த காட்சி. அவ்வளவு பேர்களும் ஏன் கட்டப்பட்டிருக்கிறார்கள்

12

என்பது அவர்களுக்கும் ஒரு புதிராகவே இருந்தது. அதற்கிடையில் காவல் நாய்கள் அங்கு வலுவிழந்து நிற்பதையும் அவர்கள் கண்டனர்; நடந்திருந்தது என்ன வென்பதை ஒருவாறு உணர்ந்தனர்; திருடர்களைத்தான் வெள்ளையத் தேவன் வீரமுடன் எதிர்த்து மடக்கிவிட்டு "எருமைகள்" என்று ஏளனமாகச் சொல்லியிருக்கிறான் எனத் தெரிந்து கொண்டனர்; பிறகு ஆட்டுப்பட்டிக் காவற்காரனையும் தேடிக் கண்டுபிடித்துக் கட்டவிழ்த்துவிட்டுத் திருடர்களை ஊருக்குள் கொண்டு சென்று தக்க தண்டனை கொடுக்கவும் ஏற்பாடு செய்தனர். நள்ளிரவில் தன்னந் தனியே முப்பது திருடர்களுடன் சண்டையிட்டு வெற்றியும் பெற்ற வெள்ளையத் தேவனின் துணிச்சலையும் வீரத்தையும் அனைவரும் வியந்து போற்றினர்.

4. விளையாட்டுடன் வந்த வெள்ளையம்மாள்

ராமயத்தேவன் என்பவனுக்கு ஒரு மகள் இருந்தாள். வெள்ளையம்மாள் என்றும் சொக்கம்மாள் எனறும் அவளுக்குப் பெயர்கள் உண்டு. ஆனால் எல்லோரும் செல்வமாகச் 'சொக்கி' என்றே அவளை அழைப்பது வழக்கம். சொக்கி, நாட்டுப்புறத்து மங்கையரின் நடுவிலே ஒரு காட்டு ராணிபோல விளங்கினாள்; பம்பரம்போற் சுழன்று, அழகுத் தெய்வமெனத் திகழ்ந்தாள். பாரிலிருக்கும் வீரர்களையெல்லாம் அவள் பொருட்படுத்துவதே இல்லை. 'எனக்கேற்ற ராஜா வரும் வரை நான் கல்யாணம் செய்து கொள்ளவே மாட்டேன்' என்று மிடுக்குடன் சொல்லிக்கொண்டே அவள் வளர்ந்து வந்தாள். அவளது காதுகளிலும் வெள்ளையத்தேவனது வீரப்பிரதாபங்கள் விழுந்தன. அவள் அவைகளில் ஒன்றையும் லட்சியம் செய்தவளாகவே காணவில்லை 'பூ, என்ன பிரமாதம்! ஆண் பிள்ளையானால் மாடு பிடிப்பதற்கு என்ன சூரத்தனம்

வேண்டியிருக்கிறது ?' என்று வெள்ளையத்தேவன் சீனிக் காளையைப் பிடித்து மடக்கிய அன்று அலட்சியமாகச் சொன்னாள். ஆனால் ஆட்டுப் பட்டியிலே முப்பது திருடர்களை ஒரே ஒரு மனிதன் அடித்து நொறுக்கிக் கால் கைகளைக் கட்டி ஊருக்குள் கொண்டுவந்திருக்கிறான் என்ற செய்தி கேட்டதுமே, யார் அந்த மனிதன் என்று பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவளுக்கு அவளையுமறியாமலேயே எழுந்தது.

ஊர்ப் பொதுமேடையில் அந்த முப்பது திருடர்களையும் கொண்டுவந்து நிறுத்தியிருந்தபோது, அவள் வயலுக்குப் பசுந்தழை போடப் போகிறவள் போல வெளியே வந்து அக்கூட்டத்தைப் பார்த்தாள். அங்கே வெள்ளையத்தேவன் வீரந் ததும்பும் விழிகளுடன், அரும்பு மீசையுடன், ஆணழகனாக நின்றதை அவள் கண்டாள். அந்த மேடையிலே கூடியிருந்த அனைவரும் வெள்ளையத் தேவனைக் குறித்தே புகழ்ந்து பேசினபடியிருந்ததையுங் கவனமாகக் கேட்டாள். அவள் அவனைத் தன்னையுமறியாமலே பலமுறை கூர்ந்து நோக்கினாள். அவளுக்கு உண்டான வியப்பிலே பக்கத்தில் இருந்தவர்களிடம்: "அவன் ஒரு முறுக்கான ஆள்தான். அதனால்தான் முப்பது ஆட்களைக் கட்டிப்போட முடிந்திருக்கிறது" என்றாள். அங்கு நின்ற பெண்களுக்கெல்லாம் சொக்கியின் பேச்சைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. சொக்கி எந்த ஒரு வீரனைப்பற்றியும் அதுவரை அப்படிச் சொன்னதே கிடையாது அல்லவா ?

அன்று திருடர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்ட பின் சில இளவட்ட விளையாட்டுக்கள் அவ்வூரில் நடைபெற்றன. கனம் தூக்குதல், கல்எறிதல், மற்போர் இவைகளே அன்று நடைபெற்ற இளவட்ட விளையாட்டுக்களில் முக்கியமானவை. அதன் பிறகு இரவு முழுவதும் 'முளைக்

கொட்டு ஆட்டம்' மும்முரமாக நடைபெற்றது. மதுரை மாவட்டத்தில் இதை 'லாவண்டை' என்று இன்றுங் குறிப்பிடுவார்கள்.

ஒயிலாட்டம் என்பது குந்துபோட்டுக் கனமுறுக்காக ஆடும் ஆடவர் தம் ஆட்டமாகும். முளைக்கொட்டு என்பது குந்துபோட்டுத் தாளக்கட்டுடன் நாட்டுப் பாடல்களுக்கு இணைந்து கைகொட்டி ஆடுவதாகும். இதில் தென் தமிழ் நாட்டு மக்கள் இன்றும் விருப்பமுடையவர்களாக விளங்குகிறார்கள். பங்குனி மாத முதல் வைகாசி மாதம் வரை கிராம மக்கள் தம் தேவதைகளுக்குச் சிறப்புச்செய்து இந்த விளையாட்டுக்களில் ஈடுபட்டு மகிழ்வர். வட்டமாகச் சுற்றிச் சுற்றி விளையாடும் இந்த விளையாட்டில் கிராமத்து இளம் பெண்களும், ஆண்களும், சரிநிகர் சமானமாக வேறுபாடின்றிக் கூடிநின்று ஆடிப்பாடி மகிழ்வதுண்டு.

சொக்கி, இந்த 'மொளக்கொட்டு' ஆட்டத்தில் எப்போதும் பிரியமுள்ளவள். அன்றையதினம் நடைபெற்ற ஆட்டத்தில் அவள் வெள்ளையத்தேவனுக்குப் பக்கத்திலே சரிஜோடியாய் நின்று ஆடினாள். யாருக்கும் சளைக்காமல் புள்ளிமான்போல அவள் துள்ளிக்குதித்து ஆடிய காட்சி கண்கொள்ளாத காட்சியாக இருந்தது. முற்றிலும் இளைஞர்கள் அடங்கிய அந்தக் கோஷ்டியினர் மிகவும் சுறுசுறுப்பாக ஆடிப்பாடி விளையாடியதைக் கூடியிருந்தோர் மிகவும் மகிழ்வுடன் அனுபவித்தனர். 'வெள்ளையத்தேவனுக்குச் சொக்கிதான் சரியான ஜோடி' என்று எல்லோரும் பேசிக்கொண்டனர். இசையில் தேனும் பாகும் சேர்த்துக் குழைத்து வைத்தது போன்ற நாட்டுப்பாடல்களைத் தெம்மாங்கு என்ற மெட்டில் பெண்கள் பாடவும், அதற்குத் தக்கவாறு கால்களாற் குதிபோட்டுக் கைத்தாளத்துடன் இளைஞர் ஆடவுமாக நீண்ட நேரம் அவ்வாறு விளையாட்டிலேயே கழிந்தது.

கோழி கூவும் நேரத்திற்குச் சற்று முன்பாக விளையாட்டுக்கள் நிறுத்தப்பட்டன. இரவு முழுவதும் ஆடி அலுத்த களைப்பிலே, எல்லோரும் படுத்துறங்க ஆரம்பித்தனர். வெள்ளையத்தேவனும் களைப்புற்று ராமயத் தேவர் வீட்டு நடையிலே படுத்து விட்டான். சொக்கி மட்டும் தன் வீட்டின் ஒரு மூலையிலே படுத்தவள், தூங்காமல், புரண்டு கொண்டே இருந்தாள். எல்லோரையும் போல அவளும் களைத்திருந்தவள்தான்; ஆனால் தூங்கவில்லை; அவளுக்குத் தூக்கம் வரவுமில்லை. எப்படியாவது வெள்ளையத்தேவனுடன் ஏதாவது பேசவேண்டும் என்ற ஆவல் அவளுக்கு. விடிந்தால் அவன் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய்விடுவான். மேலும் அனைவரும் கேலி பேசவும் இடமாகும் என்று அவள் எண்ணினாள்.

வீட்டுக்குள் படுத்திருந்த சொக்கி ஒரு நாழிகைவரை என்னென்னவோ யோசித்தாள். பிறகு என்ன நினைத்தாளோ என்னவோ, எழுந்தாள்; மெதுவாக நடந்தாள். அயர்ந்து தூங்குபவனைப் போலப் படுத்திருந்த வெள்ளையத்தேவனும் அதே நேரத்தில் திடுக்கென்றெழுந்தான். அதைக் கவனித்து விட்டாள் சொக்கி. தண்ணீர்க் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள். அவள் வெளியில் போவதைக் கண்ட வெள்ளையத்தேவனும் ஏதோ ஒரு சக்தியால் தூண்டப்பட்டவன்போல அவளைத்தொடர்ந்து நடக்கத் தொடங்கினான்.

சொக்கி, தன்பின்னால் வெள்ளையத்தேவன் வருகிறான் என்பதை நன்றாக அறிவாள், தெரிந்தும் தெரியாதவள் போலச் சற்று வேகமாகவே நடந்தாள். சில விநாடிகளுக்குள்ளாக இருவரும் ஒருவர்பின் ஒருவராகக் குளத்தங்கரை போய்ச் சேர்ந்தனர். அப்போது அங்கே ஆள் அரவம்

எதுவுமில்லை. ஆகையால் அவர்கள் மனம் விட்டுப் பேசுவதற்கும் அது ஒரு சரியான இடமாக அமைந்தது. ஒரு நாணல் புதருக்கு அருகில் வந்ததும் சொக்கி திடீரென நின்றாள்; வெள்ளையனும் நின்றான்.

"ஆட்டுப் பட்டிக்குள்ளே அடி மிகுதியாக விழுந்ததென்று சொன்னார்களே ? பாவம்!" என்று கவலையுடன் கேட்டாள் சொக்கி.

"அடிவாங்குவதும் அடிகொடுப்பதும் ஆண்பிள்ளைகளுக்கு வழக்கந்தானே ? அதில் பாவம் என்ன ? புண்ணியம் என்ன ?" என்று அலட்சியமாகப் பதில் கூறினான் வெள்ளையத்தேவன்.

"ஆண் பிள்ளைகளுக்கு அதுமட்டும்தான் வழக்கமா ? இல்லை, தனியாகச்செல்லும் பெண்பிள்ளைகளைத் துரத்தி வருவதுகூட வழக்கமா ?" என்று கேட்டாள் சொக்கி.

"இரண்டுமே உடன் பிறந்தவைதான். அதிலும் விடியற்காலத்திலே என்னோடு பேசத்துடிக்கும் விளையாட்டுப் பெண்ணைச் சும்மாவிடலாமா? அவளைத் துரத்திப் பிடிப்பதும் தூக்கிக்கொண்டு போவதும் என்போன்றவர்களுக்கு வழக்கந்தானே ?" என்று விளையாட்டாகப் பேசினான் வெள்ளையத்தேவன். சொக்கி கலகலவெனச் சிரித்தாள்.

பிறகு அவள் கேட்டாள்; "உங்களுக்குக் கலியாணம் எப்போது ? "என்று.

"அதற்கென்ன ? என் ராணி மனம் வைத்தால் இப்பவே வேணுமானாலும் நடக்குமே!" என்று துடுக்காகப் பதில் சொன்னான் வெள்ளையன்.

"எங்கப்பன் சம்மதம்—உங்கப்பன் சம்மதம்... அப்புறம் இனமுறை வழக்கப்படி செய்யவேண்டியவைக ளெல்லாம்......—?" என்று இழுத்தாள் சொக்கி.

"அடடா! அவைகட்கெல்லாம் என்ன வந்து விட்டது? நாம் சம்மதித்து அவர்களிடம் சொன்னால் அவர்கள் என்ன, வேண்டாமென்று சொல்லிவிடுவார் கள்?" என்றான் வெள்ளையத்தேவன் அலட்சியமாக.

"எனக்குச் சம்மதந்தான். இனிமேல் நீங்கள் எல்லா வற்றையும் கவனித்துக் கொண்டாற்போதும். நான் செத்தாலும் வாழ்ந்தாலும் இனி உங்களோடேதான்!" என்று தன் முடிவைக் கூறிவிட்டுச் சொக்கி வெட்கத் துடன் பூமியைக் கால்விரல்களாற் கீறினாள்.

வெள்ளையத்தேவனது உள்ளம் அளவுகடந்த ஆவ லால் துடித்தது. ஆசை வெட்கம் அறியாது என்பது போல அப்படியே அவளைத் தூக்கிக்கொண்டு பாஞ்சைக் குப் போய்விட வேண்டும் என்று துடித்தான்; என்றாலும் உள்ளத்து உணர்வைச் சிறிது அடக்கிக் கொண்டான்.

'என்ன யோசிக்கிறீர்கள்? கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டுபோகும்? விடிந்ததும் அப்பனிடம் சொல்லிச் சம்மதம் வாங்கிக்கொண்டு அதற்குமேல் பரிசம் பாக்கு எல்லாம் வைத்து, நான்கு பேரறிய, ஊரறிய என்னை உங்களுடைய வீட்டுக்கே சீக்கிரம் அழைத்துக் கொண்டு போய்விடுங்கள்' என்று தன்னுள்ளத்திலே பொங்கி எழுந்த ஆவலையும் மகிழ்ச்சியையும் அடக்கிக் கொண்டே சொன்னாள் சொக்கி.

வெள்ளையன் புத்துணர்வு பெற்றான். 'உண்மைதான் சொக்கி! நீ சொன்னபடியே உடனே செய்கிறேன். நீ

குளத்துப் பக்கந்தானே போகிறாய்? நான் வீட்டுக்குப் போகிறேன். சீக்கிரம் வந்துவிடு' என்று சொல்லியவாறே வீடு செல்வதற்காகத் திரும்பினான். சொக்கியும் ஒய்யாரமாக அன்னநடை பயின்று ஒயிலுடன் குளத்தங்கரையை நோக்கி நடந்தாள். தன் உள்ளத்திலே எழுந்த ஆசையை உடனே வெளியிட்டு, அதற்கு ஆதரவான பதிலையும் பெற்றுவிட்ட மகிழ்ச்சியின் அலைகள் அவள் உருவத்தின் ஒவ்வோர் அங்கத்திலும் வெளிப்பட்டன. 'அந்த வட்டாரத்திலேயே மிகச் சிறந்த வீரனும், அழகனும், பாஞ்சைப் பதி அரண்மனையின் செல்லப்பிள்ளையும் ஆன வீரமறவன் வெள்ளையத்தேவன் தன் கணவனாகப் போகிறான்' என்ற எண்ணத்தினால் அவளுடைய நடையிலேயே ஒரு புது வேகமும் அழகும் காணப்பட்டன. மெல்லிய குரலில் இனிமையான தெம்மாங்குப் பாட்டு ஒன்றை முணுமுணுத்துக்கொண்டே குளத்தங்கரையை அடைந்து, தண்ணீர்த் துறையையுஞ் சேர்ந்தாள்.

அவள் போகும் எழிலைப் பார்த்து மெய்ம் மறந்து நின்ற தேவனும் வீட்டை நோக்கி நடந்தான்.

5. வேங்கையை வென்ற வீரன்

அந்தக் குறுங்காட்டின் ஓரத்திலே ஊரை ஒட்டியவாறு ஒரு பெரிய குளம் இருந்தது. மழைக் காலத்தில் காட்டாறுகள் பல அக் குளத்திற்கு வேண்டிய தண்ணீரைக் கொண்டுவந்து நிரப்பிவிடும். குளமோ மிகவும் பெரியது; அத்துடன் ஆழமானது. எனவே வருஷம் முழுவதுமே நல்ல தண்ணீர் நிறைந்திருக்கும்.

குளத்தின் கரையிலே பல்வகை மரங்களும் செடிகளும் அடர்ந்து இருள் மிகுந்திருக்கும். தண்ணீர்த் துறை

யின் இருமருங்கிலும் நாணற்புதர்கள் அடர்ந்திருந்தன. நல்ல பகற்காலத்திலுங்கூட அதனுட் சில கொடிய மிருகங்கள் பதுங்கிக் கிடந்து அத்துறையில் இறங்கும் ஆடு மாடுகளை அடித்துக் கொன்றுவிடுவதுண்டு என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆகையாற் பெரும்பாலும் அந்தக் குளத்திற்கு எப்பொழுதும் நாலைந்துபேர் சேர்ந்து வருவார்களே தவிரத் தனிமையில் எவருமே வருவதில்லை.

அந்தக் குளத்தின் தண்ணீர்த் துறையில்தான் சொக்கி உள்ளத்திலே பொங்குங் களிப்புடன் போய்ச் சேர்ந்தாள். பொழுது புலர்வதற்கு அரைநாழிகை நேரமிருக்கும். அடர்ந்த இருளாகவுமில்லாமல் நல்ல வெளிச்சமாகவும் இல்லாமல் கார்காலத்துக் காலையைப்போல விளங்கிய நேரம். படிகளின் வழியாகக் கீழே இறங்கப் போகிறாள் சொக்கி. அந்த நேரத்தில் அவளையுமறியாமலே 'ஐயோ! செத்தேன்!' என்று பயங்கரமாக அலறினாள். நாணற்புதரின் நடுவே நெருப்புக் கனலும் கொடுங் கண்களுடன் அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது ஒரு வேங்கை. இரவெல்லாம் காட்டிலே சுற்றியலைந்து ஆட்டையோ மாட்டையோ அடித்துத் தின்றுவிட்டு உண்ட மயக்கத்தில் நாணற்புதரிலே ஓய்வெடுக்க நினைக்கும்போது சொக்கியின் அலறல் காதில் விழுந்ததும் அந்த வேங்கைக்கு ஆத்திரம் வந்தது. 'என் அமைதியையா கெடுக்கிறாய்? உன்னைக் கொன்றுவிடுகிறேன் பார்!' என்பது போலப் புதரிலிருந்தவாறே அவளை நோக்கிப் பாய்ந்தது.

சொக்கி அந்த ஊர்ப் பெண்களிலேயே உள்ளத் திண்மையும் உடலுரமும் வாய்ந்தவள். இருந்தாலும் வேங்கையை எதிரே கண்டதும் அவள் வீறுப்பெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது. அவள் உடல் நடுங்கியது. என்றாலும் பெரிய ஆபத்துக் காலங்களில் எதிர்பாராது

ஒரு துணிச்சல் ஏற்படும் என்பார்களே, அத்தகைய துணிச்சல் சொக்கிக்கும் உண்டாயிற்று. எனவே வந்தது வரட்டும் என்ற முரட்டுத் துணிவுடன் தன் கையிலிருந்த குடத்தை ஓங்கிப் பாய்ந்துவந்த வேங்கையின் முகத்திலே அடித்தாள்.

குறிவைத்துப் பாய்ந்த வேங்கையின் கண்களை ஒட்டி அந்த அடி பலமாக விழுந்தது. அதன் குறியும் அதனால் தப்பிவிடவே சற்றுத் தொலைவில் அடர்ந்திருந்த நாணற் புதரினுள் சென்று விழுந்தது. அந்தச் சில நொடிகளில் சொக்கியின் உள்ளம் பட்டபாட்டை யாராலுமே வருணிக்க முடியாது! புலி விழுந்ததும் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று குடத்தை அங்கேயே வீசிவிட்டு ஓடிவிட எண்ணினாள். புலி விழுந்த திசையைப் பார்த்தாள். சிறு சேறுஞ் சகதியுமாயிருந்த அந்தப் புதரிலிருந்து தட்டுத் தடுமாறிப் பெருஞ் சினத்துடன் சொக்கியை நோக்கி அது வந்துகொண்டிருந்தது.

ஓடித் தப்பமுடியாது என்பதை உணர்ந்த சொக்கி தண்ணீரில் குதித்துவிட்டாள். எங்கிருந்தோ ஒரு பெருஞ் சக்தி அவளை வந்து அடைந்துவிட்டதைப் போன்ற ஊக்கம் அவள் உள்ளத்தில் ஏற்பட்டது. தண்ணீருள் அமிழ்ந்தவாறே நீந்தி எதிர்க் கரைக்குச் சென்றுவிடுவது என்று அவள் எண்ணினாள். எவ்வளவு நேரந்தான் மூச்சை அடக்கிக்கொண்டு தண்ணீருக்குள்ளேயே நீந்திச்செல்ல முடியும்? எப்படியும் மூச்சு விடவும் புதிய காற்றை உள்ளே இழுக்கவும் நீர் மட்டத்திற்கு மேல் தலையைத் தூக்கத்தானே வேண்டும்? ஆனால் தலையை வெளியே கண்டால் வேங்கையும் பின் தொடர்ந்துவிடுமோ என்றும் அவள் அஞ்சினாள். அந்த

அச்சத்துடனேயே ஆனால் மிகவும் எச்சரிக்கையுடன் நீர் மட்டத்திற்கு மேல் தலையைத் தூக்கினாள். வேங்கை போயிருந்தாலும் போயிருக்கும் என்ற நினைவுடன் நீர்த் துறையை நோக்கினாள். உறுமிக்கொண்டு தண்ணீரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது வேங்கை. அவள் தலையைக் கண்டதும் 'அங்கேயா ஓடிவிட்டாய்; இதோ நானும் வருகிறேன் பார்!' என்றாற்போலத் தண்ணீரினுள் இறங்கி அவளை நோக்கி நீந்திச் சென்றது அந்தப் பயங்கர வேங்கை.

அவ்வளவுதான்; திரும்பிவந்த உயிர் மீண்டும் போய் விட்டது என்றே சொக்கி நினைத்தாள். 'பாழும் வேங்கை, என் வெள்ளையத்தேவன் இருக்கும்போதே வந்திருக்கக் கூடாதா? கொன்று குவித்திருப்பானே!' என்று எண்ணினாள். மீண்டும் தண்ணீருள் அமிழ்ந்தவாறே மிக வேகமாக எதிர்க் கரையைநோக்கி நீந்தத் தொடங்கினாள்.

அவள் எண்ணம் வீணாகவில்லை. திரும்பிச் சென்று கொண்டிருந்த வெள்ளையத்தேவன் காதுகளிலும் சொக்கியின் அலறல் விழத்தான் செய்தது. அவள் நினைவாகவே கலியாணச் சிந்தனைகளில் சிந்தையிழந்து சென்றுகொண்டிருந்தவன் திடுக்கிட்டான்; ஓடோடியும் வந்தான் குளத்தங்கரைக்கு. தண்ணீர்த் துறையில் நின்றுகொண்டு பதற்றத்துடன் நாலாபுறமும் கண்களைச் செலுத்தித் தேடினான். அவளைக் காணவில்லை; சிதைந்த குடந்தான் அவன் கண்களில் பட்டது. ஒருக்கால் கால் வழுக்கித் தண்ணீரில் விழுந்து விட்டாளோ என்ற கவலையுடன் தண்ணீரை நோக்கினான்.

அப்பொழுது பொழுது விடிந்து கொண்டிருந்தது நீச்சல் போட்டியில் நீந்துபவர்களைப்போல இருவர் நீந்திச்

செல்வதைக் கண்டான். ஒரு கணம் அப்படியே நிலைத்து நின்றுவிட்டான். தன் சொக்கியைத்தான் உறுமிக் கொண்டே செல்லும் வேங்கை துரத்துகிறது என்பதைக் கண்டதும் அவன் உடலில் ஓர் ஆவேசம் ஏற்பட்டது.

'என் சொக்கியைக் கொல்லவா நினைக்கிறாய்! உன்னையே கொன்று விடுகிறேன்!பார்!' என்று ஆங்காரத் துடன், வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு தண்ணீருக் குள் குதித்து மிக வேகமாக நீந்தத் தொடங்கினான் தேவன்.

காற்றைக் கிழித்துக் கடும் வேகத்துடன் செல்லும் அம்பைப் போன்றிருந்தது அவன் வேகம். இடுப்பில் அவனைவிட்டுப் பிரியாமல் எப்போதும் செருகப்பட் டிருக்கும் குத்திட்டி ஒன்றைத் தவிர அந்நேரத்தில் அவனிடம் ஆயுதம் எதுவும் இல்லை. ஆனால் அவனுக்கு அது போதாதா? அதுவும் தன் காதலியைக் காப்பாற்ற வேண்டிச் செல்லும் நேரத்தில் வேங்கை ஒன்றென்ன, மூன்றாயிருந்தாலும் அவன் கொன்று சிதைத்துவிட மாட்டானா?

ஒருவர்பின் ஒருவராக அந்தக் குளத்திலே நீந்திச் சென்று கொண்டிருந்தனர் அவர்கள்.

ஒரே வேகத்தில் நீந்திய சொக்கி ஏறக்குறையக் குளத்தின் நடுப்பகுதிக்குவந்துவிட்டாள். நீர்மட்டத்திற்கு மேலே தலையைத் தூக்கிப் புலி எவ்வளவு தூரத்தில் வருகிறதென்று பார்த்தாள். அவள் உடல் களைத்து விட்டது. கால்களும் கைகளும் சோர்ந்து விட்டன. வேட்டை நாயைப்போன்று மூச்சு வாங்கிக்கொண்டிருந் தாள். அதற்குமேல் நெடுநேரம் தன்னால் நீந்த முடியாது என்பதையும் அவள் உணர்ந்துவிட்டாள். நம்பிக்கைகள்

நொறுங்கிவிட்ட தறுவாயில் சற்றுத்தொலைவில் புலியும் அதைத்தொடர்ந்து அவளுடைய தேவனும் நீந்தி வருவதைக் கண்டாள்.

அவள் உள்ளத்திலே அணைந்த நம்பிக்கை ஒளி மீண்டும் எழுந்தது. ஒரு புது வேகத்துடன் நீந்தத் தொடங்கினாள். ஆனால், தான் தப்பிவிட்டாலும் பின்னால் வரும் தேவன் தப்பவேண்டுமே என்ற புதிய கவலையும் அவளைப் பிடித்தது. தாங்களிருவரும் சந்தித்துப் பேசிய அந்த முதல் நாளிலேயே, அதற்குச் சற்று நேரத்திற்குள்ளாகவே தங்கள் உயிர்களுக்கே மன்றாடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதை நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் நடு நடுங்கியது.

"தங்கள் கனவு நனவாக மாறுமா? அல்லது சிதைந்து நொறுங்கிவிடுமா?" என்று நினைத்தாள். அந்த எண்ணம் எழுந்தபோது சொக்கியின் தலை அப்படியே மயக்கத்தால் சுழல்வது போலத் தோன்றியது; கண்கள் இருண்டன; வேகம் தளர்ந்தது; கைகால்கள் சோர்ந்தன.

அவளது வேகம் ஓய ஓய மிருகத்தின் வேகம் மிகுதியாயிற்று எனத்தோன்றியது. தன் காரியம் வெற்றியுடன் விரைவிலேயே நிறைவேறப் போகிறது என்ற நம்பிக்கையில் அது வேகமாக நீந்தத் தொடங்கியது. வெள்ளையத் தேவனோ சொக்கியின் தளர்ச்சியைக் கண்டு மிக வேகமாக வந்துகொண்டிருந்தான்.

அதோ, அடுத்த நிமிஷம் சொக்கியை வேங்கை அடித்துவிடும் என்ற நிலை ஏற்பட்ட சமயத்தில் வெள்ளையத் தேவன் அதை நெருங்கிவிட்டான். அவன் வரும் வேகத்தில் நீரில் எழுந்த ஆரவாரத்தால் அவன் வருவதை

வேங்கையும் உணர்ந்தது. முதலில் அவனை ஒழித்துவிட முயன்றது.

நல்லவேளை! அது திரும்புவதற்குள் அதன் பின்னங் கால்களில் ஒன்று வெள்ளையன் கைகளின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டுவிட்டது. வேங்கையால் திரும்ப முடியவில்லை. அந்தப் பிடியிலிருந்து எளிதாக உதறி விடுவித்துக் கொள்ளவும் முடியவில்லை.

தேவனே அதைத் தண்ணீரிலே இங்கும் அங்குமாக இழுத்தடித்து அலைக்கழித்தான். என்னதான் இழுத் தடித்தும் அதனை அப்படியே நீரில் அமிழ்த்திக் கொன்று விடத் தேவன் செய்த முயற்சிகளில் எதுவுமே பலிக்க வில்லை. அதேபோலத் தன் கால்களை விடுவித்துக்கொள்ள இயலாத வேங்கையும் முன்னங்கால்களால் தண்ணீரில் ஓங்கியடித்துக்கொண்டே பயங்கரமாக உறுமியது. முன் னங்கால்களால் அவனை அறைந்து கொன்றுவிடவும் முயன்றது. ஆனால் வெள்ளையத்தேவனே அதன் பின்னங் காலைப் பிடித்த உடும்புப் பிடியை விடாமல் அதன் முன்னங்கால்களுக்கும் அகப்படாமல் தந்திரமாகச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தான்.

அந்த நிலையிலேயே சற்று நேரம் சென்றதும் வேங் கையின் வேகம் தளர ஆரம்பித்தது. ஆனால் தேவனின் பிடியும் தளர்ந்துவிடவே வேங்கை அவன் பிடியிலிருந்து தப்பிவிட்டது. அவ்வளவுதான் தேவன் தண்ணீருக்குள் மூழ்கிவிட்டான்.

அதுவரை வியப்புடன் மிருகமும் மனிதனும் போரா டிய அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த சொக்கி தன் காதலன் அதனைக் கொன்றுவிடவேண்டும் என்று

விரும்பினுள். வேங்கை தன்னை விடுவித்துக்கொண்டதும் அவள் நம்பிக்கை தளர்ந்தது; துணிச்சலும் பறந்து விட்டது.

உடற்சோர்வுடன் உள்ளச் சோர்வும் சேர்ந்து கொள்ளவே அவளால் அதற்குமேல் நீந்தவே முடியவில்லை. நீரில் அமிழ்ந்துவிடும் அளவுக்கு அவள் ஓய்ந்து விட்டாள். அதையறிந்த தேவன் மிகவேகமாக நீந்தி வந்து தண்ணீரில் மூழ்கிவிடும் நிலையிலிருந்த சொக்கியைத் தன் ஒரு கையால் அணைத்துத் தூக்கிக்கொண்டே எதிர்க் கரையை நோக்கி நீந்தத் தொடங்கினுன்.

சொக்கியின் உயிரை முதலில் காப்பாற்றவேண்டும் என்ற நினைவினுல் அவன் வேகத்திலே ஒரு கடுமை காணப்பட்டது. காற்றைக் கிழித்துப் பறந்து செல்லும் கழுகைப்போல அவன் சென்முன்; கரையையும் அடைந்து விட்டான்.

கரையை அடைந்ததும் சொக்கியை ஒரு மரத்தின் அடியில் படுக்கவைத்துவிட்டுக் குத்திட்டியை இடுப்பிலிருந்து உருவிக்கொண்டு வேங்கையை எதிர்க்கத் தயாரானுன் தேவன்.

தன்னைத் தேவனின் இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்ட வேங்கையும் விடேன் தொடேன் என்று அவர்களைத் துரத்திக்கொண்டே வந்து கரை ஏறியது.

அவ்வளவுதான்; வெறிகொண்ட சிங்கம்போல அதன் மேல் ஈட்டியுடன் பாய்ந்தான் தேவன். வேங்கைக்கும் தேவனுக்கும் அரை நாழிகை நேரம் நடந்த மிகக் கடுமையான போராட்டத்திற்குப் பின்னர் வேங்கை செத்து விழுந்தது. தேவன் தளர்வுற்றுத் தள்ளாடித் தள்ளாடிச்

சொக்கியை நோக்கிச்சென்ருன். சொக்கியோ நினைவிழந்து ஒரே மயக்கத்திலிருந்தாள். தன் சோர்வையும் பொருட்படுத்தாமல் அவளை அப்படியே தூக்கித் தன் தோளிற் போட்டுக்கொண்டே செத்துக்கிடந்த வேங்கையையும் வாலைப்பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு வெள்ளையத்தேவன் ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

வெற்றியின் பெருமிதம் அவன் கண்களில் ஒளி வீசியது. உடல் முழுதும் வேங்கையின் நகங்களால் கிறப்பட்டு இரத்தம் கசிந்து சொட்டிக் கொண்டிருந்தது. இரத்தக் கறைபடிந்த குத்திட்டி இடுப்பில் விளங்கியது. அவன் வேட்டியோ முழுதும் இரத்தத்தில் நனைந்து செக்கச் செவேலென்று காணப்பட்டது. அவ்வாறு ஒரே இரத்த வெள்ளத்தில் குளித்தவனுகக் காலாந்தகார உருத்திரனைப்போல வந்துகொண்டிருந்தான் தேவன்.

விடிந்து நெடுநேரமாகியும் தன் மகளைக் காணுத ராமயத்தேவர் கலங்கிஞர். வெள்ளையத் தேவனையும் காணவில்லை என்றதும் அவர் திடுக்கிட்டார். 'என்னவோ? ஏதோ ?' என்று அலறியடித்துக்கொண்டே வேற்கம்பை எடுத்துக்கொண்டு வெளியே வந்தவர், வீட்டிலே குடத்தைக் காணுததால் அவள் குளத்துக்குப் போயிருக்கலாமெனக் கருதிக் குளக்கரையை நோக்கி விரைந்தார்.

நடுவழியில் வெள்ளையன் வரும் நிலையைக் கண்டதும் அவர் குடல் நடுங்கியது ; உரை குளறியது. வெள்ளையன் தோளில் மயங்கிக் கிடக்கும் தன் மகளையும், வெள்ளையனின் இரத்தஸ்நான நிலையையும் கண்டு திடுக்கிட்டார்.

'வேங்கைப் புலி விரட்டியது ! இதோ அதைக் கொன்று விட்டேன் !' என்று சர்வசாதாரணமாகச் சொன்ஞன் தேவன்.

ராமயத்தேவர் அப்படியே ஆனந்த பரவசரானார். தன் மகளை வாங்கித் தன் தோளில் போட்டுக்கொண்டு வெள்ளையனையும் அணைத்துக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தார். தன் குலவிளக்கைக் காப்பாற்றிய குமரன் என்று அவனைக் கொண்டாடினார்.

ஊர்த் தெருவிலே எதிர்ப்பட்டார்க் கெல்லாம் வெள்ளையத் தேவனின் வேங்கையைக் காட்டி மகிழ்ந்தார்.

இராமய்யத் தேவரின் வீட்டு முற்றத்திலே வெள்ளையத் தேவன் இருந்தான். உள்ளே சொக்கியின் மயக்கந் தெளியப் பெண்கள் ஆவன செய்துகொண்டிருந்தனர்.

தேவனின் காயங்களைச் சிலர் கட்டிக்கொண்டிருந்தனர். புகழ் மாலைகளால் அவனைப் போற்றிக்கொண்டிருந்தனர் பலர். சிறுவர்களும் சிறுமிகளும் அவனைத் தெய்வமாகக் கருதினர். அவனோ உடல் வலியும் சோர்வும் மிகுதியாயிருந்த நிலையையும் மறந்து வீரச் சிரிப்புச் சிரித்து வந்தவரை வரவேற்றுக்கொண்டிருந்தான்.

'வேங்கையை வென்ற மாவீரன் வாழ்க! வெள்ளையத் தேவன் வாழ்க! அவன் வீரச்செயல் புரியக் காரணமாயிருந்த சொக்கியும் வாழ்க!'' என்ற வாழ்த்தொலிகளை எழுப்பிக் கூத்தாடினர் மறக்குலத்துச் சிறுவர்கள்.

அந்தப்புகழுரைகள் தேவனுக்கு ஒருவிதப் புத்துணர்வை யூட்டின. அவன் நோவையும் மறந்து தான் சொக்கியைக் காப்பாற்றிய கதையைச் சுற்றியிருந்தவர்களுக்குங் கூறத் தொடங்கிவிட்டான்.

6. திருமணம் பேசினர் தேவனுக்கு

களைப்பு நீக்கிக்கொண்டிருந்த சொக்கி தன்னைச் சுற்றி ஒருமுறை பார்த்தாள்; கணக்கற்ற புகழ்மாலைகளுக் கிடையே விளங்கும் வெள்ளையத் தேவனையும், அவன் காலடியிலே செத்துக்கிடந்த அவ் வேங்கையையுங் கண்டாள். என்ன நடந்திருந்தது என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது. எல்லையற்ற ஆனந்தம் அவள் உள்ளத் திலே ஏற்பட்டது. 'செத்தோம்' என நினைத்த தான் உயிரோடு விளங்குவதைவிட, வேங்கையைக் கொன்று தன்னைக் காப்பாற்றியவன் வெள்ளையத் தேவன் என்பதிலே அவள் உள்ளம் என்றுமிலாத ஒருவகைப் பேரானந்தத்தைக் கண்டது.

சொக்கி மயக்கம் நீங்கிக் கண்விழித்ததும் அதே கவலை யாக அவளருகிலேயே நின்ற ராமய்யத்தேவர் மகிழ்ச்சி யடைந்தார். 'வெள்ளையத் தேவா! இதோ பார்! சொக்கி பிழைத்து விட்டாள்' என்று அவரையும் மறந்து கூவினார். சுற்றி நின்றோர், அவர் படபடப்பைக்கண்டு கலகலவென நகைத்தனர்.

'தனியாக அப்படிப் போகலாமா அம்மா? வெள்ளை யத் தேவனில்லையென்றால் உன்னை நாங்கள் கண்டிருக்க முடியுமா? அதோ பார்! அவன்தான் உன் உயிரைத் தந்த தெய்வம்!' என்று தன்மகளைச் செல்லமாகக் கடிந்து கொண்டே வெள்ளையத் தேவனைக் காட்டினார் தேவர்.

'அவரா அப்பா, என்னைக் காப்பாற்றினார்!' என்று ஒன்றுமறியாதவளைப்போலக் கேட்டாள் அந்தக் கள்ளி.

'ஏனப்பா! உங்களுக்கு ஆட்சேபமில்லையென்ருல். அவரையே நான் கல்யாணஞ் செய்து கொள்ளுகிறேன்' என்ருள் அவள்.

'சரியானயோசனை சொக்கி. எனக்கு ஆட்சேபமா? வெள்ளையத் தேவன் என் மருமகன் என்ருல் அதைவிட எனக்கென்ன பெருமை வேண்டியிருக்கிறது. இதோ அவனையே கேட்டு விடுகிறேன்' என்று சிறு குழந்தை யைப் போல அந்த மகிழ்வான செய்தியை அடக்க முடியாமல் ஓடினுர் தேவர்.

வெள்ளையனின் வீரமோ நாடறிந்த செய்தி. அவனைக் கணவனுக அடைவதற்கு எந்த மறக்குல மங்கைதான் விரும்பமாட்டாள்? எந்தத் தந்தைதான் அதற்குத் தடை சொல்ல நினைப்பார்.

'சரியான புளியங் கொம்பைத்தான் பிடித்திருக்கிருய். அதற்குத்தானு இந்த வேங்கை நாடகமெல்லாம்?' என்று சொக்கியைக் கேலிசெய்தனர் சுற்றி நின்ற அவள் தோழிகள். வெட்கத்தால் அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

'என்ன மாப்பிள்ளை! சொக்கி என்ன சொல்லுகிருள் தெரியுமா! உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம்? எனக்குச் சம்மதம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?' என்று வெள்ளையத்தேவனைக் கேட்டார் ராமய்யத்தேவர்.

'சரியான யோசனை!' என்று அங்கிருந்தவர் அனைவரும் அவர் வார்த்தையை ஆமோதித்தனர்.

வீரம் ஒளிவீசும் வெள்ளையனின் முகம் அப்போது வெட்கத்தால் கவிழ்ந்தது. அந்த ஆனந்தத்தில் பேச்சே வெளி வரவில்லை. திக்கித் திணறி 'ஒருவார்த்தை பாஞ் சாலங்குறிச்சி அரண்மனையில் சொல்லிவிட்டால்...' என்று இழுத்தான் அவன்.

'அதற்கென்ன ; அப்படியே செய்வோம்' என்றார் தேவர். வீரன் வெள்ளையன் தன் மருமகனாகப்போகிறான் என்று எண்ண எண்ணத் தேவரின்மகிழ்ச்சி கரைபுரண்ட தாக விளங்கியது.

இரண்டொரு நாட்கள் அங்கேயே தங்கிக் காயங்கள் ஆறியதும் பாஞ்சைக்குச் சென்றான் வெள்ளையத்தேவன்.

அரண்மனைக்குச் சென்று மன்னனின் அனுமதி பெறு வதற்காக ராமய்யத் தேவரும் அவர் உறவினர் சிலரும் வெள்ளையத்தேவனுடனேயே பாஞ்சைக்குச் சென்றனர்.

பாஞ்சையரண்மனையிலே மன்னன் கட்டபொம்மன் தன் அவையினருடன் அமர்ந்து அரசியற் காரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நேரத்திலே வெள்ளையத் தேவனும் அவனுடன் சென்றபிறரும் வந்து வணங்கினர்.

உடலெல்லாம் காயங்களுடனேவந்து நின்ற வெள்ளை யத் தேவனைக் கண்ட மன்னன் உள்ளம் பதறினான்.

'என்ன வெள்ளையா! ஏன் இப்படி? என்ன நேர்ந்தது?' என்று கேட்டான்.

திருடர்களை ஒருவனாகவே வெள்ளையன் மடக்கிய தையும், வேங்கையைக் கொன்று வீரமுடன் தன் மகளை மீட்டதையும் விளக்கமாகக் கூறிமுடித்தார் ராமய்யத் தேவர்.

உள்ளத்திலே பொங்கி எழும் உவகையுடன் தேவர் சொல்லி வந்தவை யனைத்தையும் கேட்டு மெய்ம்மறந் திருந்தனர் அங்கிருந்தோர்.

'சபாஷ் வெள்ளையத் தேவா? நீதான் வீரன்!' என்று பாராட்டினான் மன்னன். தான் வளர்த்த செல்வன் பெருவீரனாக விளங்குவதைக் கண்ட மன்னனின் மகிழ்ச் சிக்கு எல்லையே இல்லை.

'இன்னொரு விண்ணப்பம் மன்னா!' என்று தன் காரியத்தைச் சொல்லத் தொடங்கினார் ராமய்யத்தேவர்.

'ஆம், உம்மை மறந்து விட்டேனே! யாரங்கே! தேவருக்கு நிறையப்பொன்னும் பிறவும் வாரி வழங்குங் கள். அத்துடன் இதோ இம் மாலையை உம் மகளுக்கு என் அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளும்!' என்று சொன் னான் மன்னன் கட்டபொம்மன்.

'தங்கள் அன்புக்கு மகிழ்ச்சி. ஆனால், சொக்கியை வெள்ளையத் தேவருக்கே திருமணஞ் செய்துதர நாங்கள் விரும்புகிறோம். அவளுக்கும் அவருக்கும் சம்மதம். தங்கள் அனுமதியையும் வேண்டித்தான் நாங்கள் வந் தோம்' என்றார் ராமய்யத் தேவர்.

'அப்படியா! நிரம்பவும் மகிழ்ச்சி! அதுதான் வெள்ளை யன் அவ்வளவு வெட்கத்துடன் நிற்கிறானோ? சரி. திரு மணம் மிகவும் விமரிசையாக நடைபெற வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உடனேயே நடை பெறட்டும்' என்று ஆணையிட்டான் மன்னன்.

ராமய்யத் தேவர் மிக்க மகிழ்ச்சியுடனும், கை நிறைய மன்னன் தந்த பரிசுகளுடனும் திருமண ஏற்பாடு களைக் கவனிக்கத் தம் கிராமத்திற்குச் சென்றார்.

பாஞ்சை யரண்மனையிலும், நகரிலும் வெள்ளையத் தேவனின் திருமணத்தை எதிர்நோக்கி மிகவும் ஆடம்பர மான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அனைவரும் திருமண நன்னுளை ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருந்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சியைக் காலம் கவிழ்க்கச் சதி செய்துகொண்டிருந்த கோலத்தை யார் அறிவார்கள்? வெள்ளையத் தேவனின் திருமண வைபவம் மட்டுமல்ல, பாஞ்சையின் வரலாறே மாறிப் போகும்படியான கொடுமையைச் செய்வதற்கான சதிகள் அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்தன.

7. வந்தானையா வெள்ளைக்காரன்

அவ்வாறு எங்கும் மகிழ்ச்சி தாண்டவமாடிக்கொண் டிருந்த நாளையில் ஒருநாள். காலை நேரம், இரண்டு குதிரை வீரர்கள் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து சேர்ந்தார்கள். பாளையங்கோட்டையில் தங்கியிருந்த வெள்ளைக்காரக் கலெக்டர் துரையின் ஆட்கள் அவர்கள் என்பதை, அவர் களைப் பார்த்ததுமே எல்லோருந் தெரிந்துகொண்டார்கள். வெள்ளைக்காரர்களுக்கும், பாஞ்சாலங்குறிச்சியாருக்கும் ஓரளவு சச்சரவு மூண்டிருந்த காலம் அதுவாகையால், ஊரில் அவர்கள் வந்ததைக் குறித்துப் பலர் பலவாறுகப் பேசிக்கொண்டார்கள். வெள்ளைக்காரக் கலெக்டர், ஏதோ வம்பு செய்யும் கருத்தோடுதான் தூதுவர்களை அனுப்பியிருக்கிறுன் என்றே அனைவரும் எண்ணினர்.

நடந்ததும் அதுவேதான்! கிழக்கிந்தியக் கம்பெனியா ரால் வரி வசூலுக்கென நியமிக்கப்பட்டிருந்த திருநெல் வேலி ஜில்லா கலெக்டர் ஜாக்ஸன் என்பவன், கட்ட பொம்முவுக்கு அத் தூதுவர்கள்மூலம் ஒரு கடிதம்

அனுப்பியிருந்தான். அந்தக் கடிதம் கண்டவுடனே தன்னை நேரில் வந்து சந்திப்பதுடன் யாதொரு தாமதமுமின்றி வரிப்பணத்தையும் செலுத்திவிட வேண்டும் என்று அந்தக் கடிதத்திலே கண்டிப்பாக உத்தரவிடப்பட்டிருந்தது. அதைப்போன்ற உத்தரவுகள் அதற்கு முன் எத்தனையோ முறை வந்திருந்தும், கட்டபொம்மு அவைகளை யெல்லாம் இலட்சியம் செய்ததில்லை. ஆனால் அப்போதோ அவ்வாறும் இலட்சியம் செய்யாமலிருக்க வேண்டாம் என அவன் எண்ணினான். எனவே, கலெக்டரைத் தன் பரிவாரங்கள் புடைசூழப் போய்ப் பேட்டி காண்பது என்று முடிவு செய்தான். கலெக்டரிடமிருந்து வந்திருந்த தூதுவர்களிடம் "ஒரு வாரத்தில் தானே நேரில் வந்து கலெக்டரைப் பேட்டி காண்பதாகச் சொல்லியனுப்பினான்.

8. வஞ்சகம் வீழ்ந்தது!

கலெக்டர் ஜாக்ஸனைக் காண கட்டபொம்மு துரை முடிவுசெய்ததும் படைவீரர் யாவருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது. கம்பளத்தார்கள் திரளாகக் கூடினர். வீரஞ்செறிந்த வெள்ளையத்தேவன் பச்சைத் தலைப்பாகையுடன் பிச்சிப்பூச் சூடி மணமகன் போன்ற பெருமிதத்துடன் வந்தான். கார்காலத்திலே அலை அலையாக வானின் வழி சஞ்சரிக்கும் முகிற்கூட்டங்களைப்போல வீரர்களின் அணிகள் பாஞ்சைப் பதியில் குவிந்தன. வீரபாண்டியரும் அவர்தம் தம்பியரும் அக் காட்சிகளைக் கண்டு உள்ளத்திலே பெருமிதங் கொண்டனர்.

பாஞ்சைப் படைவீரர் அனைவரும் நாட்டுப் பற்று மிக்கவர்கள்; வீரர்களின் பரம்பரையிலே தோன்றிய மாவீரர்கள்; 'மானம் பெரிது, மரணம் பெரிதல்ல' என எண்ணும் மாண்பு நிறைந்தவர்கள். வெள்ளையரின்

படைகளோ பெரும்பாலும் கூலிப்படைகள். காசுக் காகத் தம்மவரையே அழிக்க முன்வந்த கோடரிக்காம்பின் திருக்கூட்டங்கள். அதிலே கலந்து அவற்றை ஆட்டிப் படைக்கும் பறங்கியர்களோ வெறிகொண்டவர்கள். ஆனல், பாஞ்சை வீரர்களோ நாட்டுக்காகத் தியாகஞ் செய்ய முன்வந்த பண்பினர். அவர்கள் கூலியை விரும் பியவரில்லை. நாடு நன்ருயிருந்தாலன்றித் தங்கள் வீடு நல்வாழ்வு பெருது என்று உணர்ந்தவர்கள்.

பயணத்தை அறிவிக்கும் பேரிகைகள் முழங்கின. படையினர் அணிவகுத்து நின்றனர். வேல் தாங்கிய வீரர்கள் ஒருபுறம்; குதிரை நடத்தும் குதிரைவீரர் ஒரு புறம்; வில் வீரர் ஒருபுறம்; வாள்வீரர் ஒருபுறம்; இங் ஙனம் குழுமி நின்றனர் பாஞ்சைப்பதியின் வீரர்கள்.

அவர்களிடையே இளஞ் சிங்கத்தை நிகர்த்த திண் மையும் வலிமையும் உடைய வெள்ளையத்தேவன் விளங்கினன்.

தம் ஆணைக்குக் கட்டுப்பட்டுக் குழுமி நின்ற வீரர்களைக் கண்ட கட்டபொம்மு உள்ளம் களிப்பு எய்தியவனய் உபசார வார்த்தைகள் கூறி அவர்களைப் பாராட்டினன்.

முத்துராமு என்ற குதிரையின்மீதமர்ந்து கம்பீரமாகச் சென்ருன் கட்டபொம்மு. அதுதான் அவனுடைய அன்பைக் கவர்ந்த குதிரை. கண் கவர் வனப்பும் காற்றி னும் கடிது செல்லும் வேகமுங் கொண்டது அது. அவன் இருமருங்கும் அவன்தன் தம்பியர் ஊமைத் துரையும் துரைச் சிங்கமும் அவர்கள்தம் குதிரைகள் மீதமர்ந்து சென்றுகொண்டிருந்தனர். பளபளக்கும் வேலுடன் அவர்களை அடுத்துச் சென்றுகொண்டிருந் தான் வெள்ளையத் தேவன்.

சக்கம தேவியைச் சென்று பணிந்து, பின்னர் அவர்கள் திருநெல்வேலியை நோக்கி நடந்தனர். குறித்த காலத்தில் நெல்லைப் பதியைச் சார்ந்து அங்கே விசாரித்ததில் கலெக்டர் நெல்லையைவிட்டுத் திருக்குற்றாலம் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது.

'தம்மை வரச்சொல்லிவிட்டு வம்பு செய்கின்றானே வெள்ளைக்காரன்' எனக் கட்டபொம்மு எண்ணினான். வெள்ளையத்தேவன் முதலியவர்களோ வெகுண்டனர். ஆனாலும் தலைவன் விருப்பப்படியே அனைவரும் குற்றாலஞ் சென்றனர்.

திருக்குற்றாலநாதர் சந்நிதியின் முன்னர் சென்று அவரை வணங்கி, பின் அங்கேயே கூடாரங்கள் அமைத்துப் பாஞ்சையர் தங்கினர். குற்றாலத்தின் வடபுறத்திலோர்பால் பீரங்கிகளும் சிப்பாய்களும் இடைவெளியின்றிச் சூழ்ந்திருக்க ஜாக்ஸன் தங்கியிருந்தான்.

கட்டபொம்மு, வெள்ளையத்தேவன் முதலியோர் பரம்பரை பரம்பரையாக வந்த வீர ரத்தம் பாய்ந்தோடும் உடலினர். ஜாக்ஸனோ ஒரு சாதாரண அதிகாரி. நாடாளும் தலைவனை நடத்தும் பண்பினை உணராத நாடோடி அவன்.

'திருநெல்வேலிச் சீமையிலே கட்டபொம்மு மிகவுஞ் செல்வாக்கு உடையவன். எவ்வித உருட்டல் மிரட்டல்களும் அவனிடம் செல்லாது. எனவே அவனை இராமநாதபுரம்வரை இழுத்தடித்துக்கொண்டு சென்றால் நல்லது' என்று நினைத்தான் ஜாக்ஸன்.

குற்றாலத்திலே கட்டபொம்முவிற்குப் பேட்டி தரமறுத்துச் சொக்கம்பட்டி சென்றான் அக் கயவன். அவ

னுடைய இழி செயல் "வீரபாண்டியனின் உள்ளத்திலே ஐயத்தை விளைத்தது. எனினும், முடிவு என்ன எனக் கண்டுவிடும் எண்ணத்தால் ஜாக்ஸன் சொன்னவாறே பாஞ்சைப் பதியினர் சொக்கம்பட்டி சேர்ந்தனர். அங்கேனும் அவன் நியாயமாக நடந்திருத்தல் கூடாதா? ஆணவத்தின் உருவமான அவனா நேர்மையை நினைப்பான்? எனவே அங்கும் பேட்டியளிக்க மறுத்தான்.

அவ்வாறாக ஜாக்ஸன் முன்னரும் வீரபாண்டியன் பின்னருகமாகச் சொக்கம்பட்டி, சிவகிரிச் சேற்றூர், வில்லிப்புத்தூர், பேரையூர், பாவாலி, கமுதி, அலங்கானூர் முதலான பல ஊர்களுக்கும் சென்றனர்.

ஏதேதோ காரணங்களைச் சொல்லியும் சொல்லாமலும் கடத்திக்கொண்டே வந்தான் ஜாக்ஸன். கட்டபொம்மு துரையும் திரும்பிவிடாது பின் தொடர்ந்து வரவே அவன் ஒருவாறு மகிழ்ந்தான். பல இடங்களுக்கும் அவனை இழுத்தடித்து அவமானப்படுத்திவிட்டோம் என அவன் சிறுமதி மகிழ்ச்சியடைந்தது. குமுறும் கோமகனின் நெஞ்சத்தைக் குள்ளநரிவேலை செய்து குதூகலிப்பவன் உணர முடியுமா?

இறுதியாக 1798-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் நாளன்று இராமநாதபுரம் சேர்ந்தான் ஜாக்சன். வேட்டை நாய் போல அவனைத் துரத்திவந்த வேந்தனும் அவன் படையினரும் அங்கே வந்து சேர்ந்தனர்.

ஒன்றல்ல பத்தல்ல, ஏறக்குறைய நானூறு மைல்கள் நடந்து பாஞ்சையிலிருந்து இராமநாதபுரத்திற்கு அவர்கள் அச் சுற்றுவழியாக அவனைத்தொடர்ந்து சென்றனர். வழிநடையிலேயே இறுபத்து மூன்று நாட்கள் அவ்வாறு

கடந்தன. சின்னஞ்சிறு பாளையக்காரர்களுக்குமுன் தன்னை அவ்வாறு நடத்திய ஜாக்ஸனின் அகம்பாவத்தை நினைத்து வீரபாண்டியன் நெஞ்சங் கொதித்தான்.

இராமநாதபுரத்தை அடைந்ததும் ஒருவாறு அக் கயவன் உள்ளத்தில் திண்மை உண்டாயிற்று. அங்கே வீரபாண்டியரின் ஜம்பம் சாயாது என எண்ணினான். பேதை! அவன் அறிவானா வீரப் பெருமக்களின் ஆற்றலைப் பற்றி!

இராமநாதபுரத்தின் கோட்டைக்கு வடபாரிசத்திலே கட்டபொம்முவும் அவன்தன் துணைவர்களும் தண்டிறங்கினர். கூடாரங்கள் அமைக்கபட்டன. வெள்ளிக் கால்கள் நிறுத்திப் பட்டுக் குஞ்சலங்கள் பளபளவென மின்ன விதானம் அமைக்கப்பட்டது. மெத்தையும் திண்டும் தலையணையும் மெல்லென்று அமைத்து வீற்றிருந்தான் கட்டபொம்மு. கொதிக்கும் நெஞ்சமும் சோர்வும் அவர்தம் கம்பீரத்தை மாற்றிவிடவில்லை. வீரர்கள் சங்கநாதஞ் செய்தனர். இன்னிசையும் எழில்மிகு நடனமும் அங்கு நிலவின. கட்டியங்கூறிக் கட்டிளங்காளையர் இருவர் கூடாரத்தைக் காவல் காத்து நின்றனர்.

அந்நேரத்தில் வெள்ளையத்தேவன் உள்ளம் அடைந்த கொடுந்துயரத்திற்கு ஓர் எல்லையும் கிடையாது. வீரமும் தீரமும் பண்பும் அன்பும் மிக்க கட்டபொம்முதுரையை நாடோடிகளாக வந்து நடாசைகொண்ட வெள்ளைக் கலெக்டர் நடத்தும் விதத்தை எண்ணி எண்ணிச்சீறினான். வெள்ளையனை அவமானப்படுத்த எண்ணிய தேவன் உறுதி மிக்க கறுப்புச் சேவல் ஒன்றையும் வெள்ளைச் சேவல் ஒன்றையும் போரிடச்செய்தான். சுற்றிலொரு கூட்டமும் கூடியது. வெள்ளைச் சேவல் சோர்ந்து தடுமாறும்

TAMIL NADU ARCHIVES LIBRARY
112113

போதெல்லாம் 'வெள்ளையன் வீழ்ந்தான், வெள்ளையன் ஒழிந்தான் !' என்றெல்லாம் கூச்சலிட்டனர் கூட்டத்தினர்.

இராமலிங்க விலாசம் இராமநாதபுரத்தின் சேதுபதிக்குரியது. — அதில் தங்கியிருந்தான் ஜாக்ஸன். அவனுக்கு உதவியாக அங்கே நின்று மற்றொருவன் தளபதி கிளார்க்கு. அந்த இரு சதிகாரர்களும் கூடிக்கூடிப்பேசினர்; கொற்றவனைச் சிறைப்பிடித்துவிடத் திட்டமிட்டனர்; கட்டபொம்மனின் கோலாகல வாழ்வைக்கண்டு நகைத்தனர்; 'ஈசல்போல உத்சாகத்துடன் பறக்கிறான்; ஆனால் சிறிது நேரத்தில் வரும் அழிவை எண்ணினானில்லை' என்று நினைத்தனர். 'கட்டபொம்முவைக் கைப்பிடியாகப் பிடித்துக் கைது செய்து அவன் கொட்டத்தை அடக்காவிடில் நான் கலெக்டர் ஜாக்ஸன் அல்ல !' என்று இறுமாந்து வீறாப்புப் பேசினான் அவன்.

கட்டபொம்முவும், அவன் தம்பியரும், தானாபதிப் பிள்ளையும் அவனைக் காணவரவேண்டுமெனவும், பரிவாரங்கள் வருதல் கூடாது எனவும் கருத்தமைந்த கடிதம் ஒன்றினை எழுதிப் படைவீரன் ஒருவன் வழி ஜாக்ஸன் அனுப்பினான்.

அதனைக்கண்ட பாஞ்சையினர் உள்ளந்துடித்தனர். 'பரிவாரங்களுடன்தான் வருவோம் எனச் சொல் உன் தலைவனிடம்' என்று கூறி அனுப்பினர் அப் படைவீரனிடம்.

இராமநாதபுரத்திலே. முன்னாள் பாஞ்சையிலே பணி செய்த ஒருவன் இருந்தான். அவனைத் தந்திரமாக அனுப்பிக் கட்டபொம்முவைத் தனியாக வரச்செய்யச் சூழ்ச்சி செய்தனர். அதை அவன் நிறைவேற்றினால் பொன்னும்

மணியும் பிறவுந் தருவதாக வாக்களித்தனர். அவனும் சென்றான்.

துரோக நெஞ்சுடன் வந்த அவனையும் அகமும் முகமும் மலர ஆர்வமுடன் வரவேற்று உபசரித்தார் கட்டபொம்முதுரை. அவர்தம் களங்கமற்ற பண்பையும் உள்ளத்தையும் கண்ட அவன் கலங்கினான். துரோக இருள் அகலத் துடிக்கும் உள்ளத்துடன் கலெக்டர் ஜாக்ஸனின் வஞ்சக எண்ணத்தை விளக்கிக் கூறினான். இராமலிங்க விலாச மாளிகை யெங்கும் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் தாங்கி வீரர் பலர் மறைந்திருப்பதையும் கூறினான். உடனே திரும்பிச் சென்றுவிடவும் கூறினான்.

துரை எண்ணினார். எட்டையபுரத்தார் ஏளனம் செய்வாரே என்று நினைத்தார். வருவது வரட்டும் எனத் துணிந்தார்.

வெள்ளையத்தேவனும் ஊமைத்துரையும் கடுஞ்சினங் கொண்டனர். 'பாஞ்சைப் பதிக்கு நாம் வேங்கைப் புலி! இப் பஞ்சைப் பயலுக்கு அஞ்சுவதா?' என ஆர்ப்பரித்தனர்.

1798 செப்டம்பர் 10-ம் நாள் சந்திப்பதற்குச் சென்றனன் பாஞ்சை மன்னன்; தம்பியர் உடன் வரத் தனித்தே சென்றனன்; எனினும் வெள்ளையத்தேவனுக்கும் பிற வீரர்களுக்கும் எச்சரிக்கையுடனிருக்குமாறும் எந்த நொடியிலும் போரிடத் தயாராக இருக்கு மாறும் பணித்தனன்.

இராமலிங்க விலாசத்தின் வாயிலில் அவர்கள் வந்ததும் வெள்ளையத் தேவனை அங்கே நிறுத்தினர். ஊமைத்துரையும் தானபதியும் உடன்வர உள்ளே சென்றனன் கட்டபொம்மன்.

வாயிலில் நிற்கும் வெள்ளையத்தேவனின் வீரத்திரு வுருவம் கண்ட கூலிப்படைவீரர் பலரும் நடுங்கினர். 'யார் இவன் ? காலனைப்போன்று தோற்றுகிறான். வீர னென்றால் இவனைப் போன்றல்லவா இருக்க வேண்டும்!" எனப் பேசினர்.

ஆனால் உடலை அங்கே நிறுத்தி உள்ளத்தை உத்தமர் கட்டபொம்முவுடன் உள்ளே அனுப்பிவிட்டுப் பட படக்கும் நெஞ்சமுடன் நின்றான் வெள்ளையத் தேவன்.

கலெக்டரின் உள் அறையினுள் ஊமைத்துரையும் தானாபதியுங்கூட நுழைய அனுமதிக்கப்படவில்லை. கலங் காத நெஞ்சினரான கட்டபொம்முதுரை மட்டுமே சென்றார். கைகள் தினவெடுக்கக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றான் ஊமைத்துரை.

பேட்டி நடந்தது: ஒன்றல்ல இரண்டல்ல, அடுக் கடுக்காகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டே இருந்தான் கலெக்டர் ஜாக்ஸன். சினம் மீறினும் சிந்தை தளராது புன்சிரிப்புடன் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார் கட்டபொம்மு.

'இறுதியாக அடங்கி நடக்காவிடில் உமது பாளையம் பறிமுதல் செய்யப்படும்' என்ற வாசகம் வந்தது வஞ்சகன் வாயிலிருந்து.

'என்ன! எனக்கு எதிரே அவ்விதம் சொல்ல என்ன துணிச்சல் உனக்கு!' எனச் சீறினார் கட்டபொம்மு.

'நாடோடி வெள்ளையர் நாடாளும் என்னை மிரட்டு வதா! புல்லனே, உன்னையும் மதித்து வந்ததே தவறு!" எனப் பேசி எழுந்து செல்ல முயன்றான் கட்டபொம்மு.

'நீர் உம்மை மறந்து பேசிவிட்டீர். உம்மைச் சிறையிட்டிருக்கிறேன். இம் மாளிகையைவிட்டு வெளியேறக் கூடாது. இது கம்பெனியார் ஆணை' என்றான் ஜாக்ஸன்.

அவன் களைப்பைப் பொருட்படுத்தாது கனலும் கண்களுடன் சென்ற கட்டபொம்மூவைக் கைது செய்ய முயன்றனர் படைவீரர் சிலர். இடது கையினால் ஜாக்ஸனை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வீரர்களை வெட்டி வீழ்த்தி வெளியே வந்தார் கட்டபொம்மு.

காத்து நின்ற ஊமைத்துரையும் வாசலில் நின்ற வெள்ளையத் தேவனும் பதறினர். எதிர்ப்பட்டாரைக் கொன்று குவித்து மாடியை அடைந்தனர் கட்டபொம்முவைக் காப்பாற்ற. தாளிட்ட கதவுகளைத் தாளால் உதைத்துத்திறந்து தறுகண்மை மீதூர வந்துகொண்டிருந்தார் கட்டபொம்மு.

உதவித்தளபதி 'கிளார்க்' என்பானின் தலை உருண்டோடி வீழ்ந்தது. வெள்ளையத் தேவனின் வாள் வீச்சிற்கும் கட்டபொம்மனின் போராண்மைக்கும் உலகு மெச்சும் ஊமைத்துரைக்கும் எதிர் நிற்பார் யார்! அரண்மனை பிணக்காடாயிற்று.

செய்திகளறிந்த பாஞ்சைவீரர்கள் பலரும் வந்தனர். ஜாக்ஸன் கதிகலங்கினான்; தப்பினேம் பிழைத்தோம் என ஓடி ஒளிந்தான். அதற்குள் அவன் பட்டபாடு பெரும்பாடாயிற்று.

'எதிர்ப்பவர் அனைவரையும் எமனுலகுசேர வெட்டி வீழ்த்தி வாருங்கள்! வாருங்கள்!' என்று எக்களிப்புடன் வெற்றி முழக்கம் செய்தனர் பாஞ்சை மன்னனும் அவன் தோழர்களும்.

கூலிப்படைகள் ஓடிப் பதுங்கின. 'வெற்றி! வெற்றி!' என்று சங்கநாதஞ் செய்தான் வெள்ளையத்தேவன். அவன் கையில் கரகரவெனச் சுழன்று கொண்டிருந்த வேலின் முனை அன்று வெள்ளையர் படைவீரரிற் பலரைக் கொன்று குவித்தது. அஞ்சா நெஞ்சினனாக அடலேறு போன்று பகைவர் கூட்டத்தைக் கலக்கினான் தேவன். கரும்புத் தோட்டத்தில் புகுந்த மதயானையைப் போன்று அவன் பகைவர் படையை அழித்த நிலைகண்டு பாஞ்சை வீரர் களிப்படைந்தனர். காலனைக் கண்டாற் போன்று நடுங்கினர் பகைவர்கள்.

அதுமட்டுமன்று வெள்ளையரின் படைவீரரிற் பலர் கூலிப் படையினர். பிழைப்பிற்கும் பிறவற்றிற்கும் ஆசைப் பட்டுச் சிப்பாய்களாக முன் வந்தவர்கள். அதனால் நாட்டுப் பற்றுடன் விளங்கும் பாஞ்சாலங் குறிச்சி வீரர்களின் முன்னால் அவர்கள் நிலைகுலைந்து நின்றதில் வியப்பு எதுவுமே யில்லை.

மேலும் இயல்பிலேயே கலெக்டர் ஜாக்ஸன் தங்களை அவமானப்படுத்தவே இழுத்தடிக்கிறான் என்று கருதி ஆத்திரங்கொண்டிருந்தனர் வெள்ளைத் தேவன் முதலா யினோர். கட்டபொம்முதுரை அரண்மனையின் உள்ளே சென்றபோது காவலர் அவர்களைத்தடுத்த நிலைகண்டும். உள்ளங் கொதிப்படைந்திருந்தனர். எனவே வெறி கொண்ட வேங்கைக் கூட்டம் ஆட்டு மந்தைகளைச் சின்னபின்ன மாக்கினாற்போன்று அவர்கள் துணிச் சலுடன் போரிட்டனர்.

சற்றேறக் குறைய நான்கு மணி நேரம்வரை அப் போராட்டம் நடைபெற்றது. வெள்ளையத்தேவன் கை வண்ணத்தின் சிறப்பை அனைவருங்கண்டு போற்றும் வாய்ப்பும் அங்கேதான் கிடைத்தது. எங்கும் பிணக்காடா

கத் திகழ்ந்தது இராமலிங்க விலாசம் அந்தப் போரின் முடிவிலே.

கட்டபொம்முதுரையைக் கைது செய்துவிட நினைத்த ஜாக்ஸனின் கனவுக்கோட்டை தவிடுபொடியாயிற்று. எளிதில் செய்து விடலாம் என எண்ணிச் சிப்பாய்களிற் பலரைக் காவு கொடுத்தான் அவன்.

அவ்வெற்றியினால் கட்டபொம்முவும் அவன் உடன் வந்தோரும் அடைந்த மகிழ்விற்கு எல்லையேயில்லை. தம்மை வஞ்சிக்க நினைத்த வெள்ளையனுக்குச் சரியான பாடங்கற்பித்து விட்டதாக அவர்கள் நினைத்தனர்.

இராமநாதபுரத்திலே ஜாக்ஸன் செய்த தவற்றின் பயன் கடைக்காரர் பலரையும் தாக்கத் தவறவில்லை. பாஞ்சைப் படையினரின் ஆத்திரம் கடைவீதி கொள்ளைபோயிற்று. எக்களிப்புடன் இறுமாந்த நடைநடந்து திரும்பினர் பாஞ்சைப் படையினர்.

அப்போதுதான், தானாபதியைக் காணாத செய்தி யறிந்து கலங்கினான் கட்டபொம்மு. பாஞ்சை சென்று பெரும் படையுடன் வந்து மீட்கலாம் என வற்புறுத்தி னர் பலரும். எனவே வெற்றி மகிழ்விலுமோர் குட்டிக் கவலையுடன் சென்றனர் அவர்கள்.

அதன் பின்னர் அவர்கட்கு அங்கு என்ன வேலை ? எனவே அனைவரும் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கிப் பயணமாயினர்.

தூத்துக்குடி வழியாக அவர்கள் திரும்பினர். டச்சுக் காரர்களின் ஆதிக்கத்திலிருந்த தூத்துக்குடி அப்போது தான் ஆங்கிலர் கைக்கு மாறியிருந்தது. எனவே, அதனையும் கொள்ளையிட்டனர் பாஞ்சைப் படையினர்.

9. புண்பட்ட மார்பு

இராமலிங்கவிலாசச் சண்டையிலே வெள்ளையத் தேவனின் கைவரிசையைக் கண்ட மன்னர் கட்ட பொம்மு பெரிதும் களிப்படைந்திருந்தார். தம் வளர்ப்புச் செல்வன் வல்லமையுடன் செயலாற்றிய திறத்தை எண்ணி எண்ணி மன மகிழ்ந்தார். அவனை மகிழ்வோடு பாராட்டினார்.

பாஞ்சாலங்குறிச்சி வீரர்களிலும் வெள்ளையத் தேவனைப் புகழாதவர் ஒருவரேனும் கிடையாது. முதல் வெற்றியுடன் முடிந்த அந்த இராமலிங்கவிலாசப் போரே வெள்ளையத் தேவனை வீரத்திருமகன் எனத் தமிழகம் உணரச்செய்த முதற் போராகும்.

அவ்வாறு பலராலும் புகழப்பெற்று இறும்பூதுடன் வெள்ளையத்தேவன் விளங்கினாலும், அந்தச் சண்டையிலே அவன் மார்பில் எதிரிகளின் வாள் ஒன்று பாய்ந்ததால் ஏற்பட்ட காயம் அவனையும் வாட்டிற்று. அதனால் பாஞ் சாலங்குறிச்சிக்கு வந்த தேவன் சில நாட்கள் படுத்த படுக்கையாய் கிடந்து துயரப்படவும் நேர்ந்தது. மருத்து வர்கள் அணியணியாகக் குழுமி அவனுக்கு மருந்துகள் போட்டு வந்தனர்.

கட்டபொம்முதுரையுடன் சென்ற தன் காதலனை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தவள் சொக்கி!

அவள் காதுகளிலும் வெள்ளையத் தேவனின் வீரம் ததும்பிய போரைப்பற்றிய செய்திகள் விழுந்தன. அதனால் பெருமகிழ்வும் பெருமிதமும் அவள் அடைந்தாள்.

ஆனால், அதைத் தொடர்ந்து வெள்ளையத்தேவன் மார்பிலே புண்ணுடன் படுக்கையிலே கிடக்கிறான் எனக் கேட்டு அவள் பதறினாள் ; துடி துடித்தாள்.

வெள்ளையத் தேவன் மார்பிற் புண்பட்டதைக் கேட்ட ராமய்யத்தேவரும் உடனே பாஞ்சாலங் குறிச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். உள்ளம் பதை பதைக்கத் தம் வருங்கால மருமகன் புண்பட்டுப் படுத்த படுக்கையா யிருக்கிறான் என அறிந்து அவர் பட்ட துயரத்திற்கு ஓர் அளவே கிடையாது.

ராமய்யத்தேவர் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்த போது மார்பிற் புண்ணுடன்—மலர்ந்த முகத்துடன் விளங் கினான் வெள்ளையத் தேவன். ராமய்யத் தேவரின் பதற் றத்தைக்கண்டு 'விழுப்புண் படாத நாளெல்லாம்' என்ற குறளை நினைப்பூட்டி ஆறுதல் கூறினான். சொக்கி கவலைப் படாதிருக்குமாறு சொல்லும்படியும் வேண்டினான்.

ஒன்றிரண்டு நாட்கள் அங்கேயே தங்கிப் புண் ஓரளவு ஆறியதும் ராமய்யத்தேவர் தம் ஊர் திரும்பினார். கவலையோடு துயரப்பட்டுக்கொண்டிருந்த சொக்கியைத் தேற்றினார். வீரர்களின் வேந்தனாக விளங்கும் வெள்ளை யத் தேவனுக்கு மார்பிலே பட்ட காயம் புகழே யன்றித் துயரல்ல என்றுங் கூறினார்.

ஆனால் தந்தையின் வார்த்தைகளால் சொக்கியின் உள்ளம் ஆறுதல் அடைய மறுத்தது. அங்கே அவளுக்கு இருக்கை கொள்ளவே இல்லை. தன் காதலன் நோயுற் றிருக்கும் நிலையறிந்தும் தான் சென்று அவனுக்கு உதவ முடியவில்லையே யென அவள் ஏங்கினாள்.

திருமணம் ஆவதற்கு முன் அவள் சென்று பார்த்துவர ராமய்யத் தேவர் இசைவுதர மாட்டார். அவரிசைந்

தாலும் சமூகம் பொறுக்குமா? எனவே, எவ்வாறு தேவனைச் சென்று காண்பது எனச் சிந்தையிலே பல்வேறு சிந்தனையலைகளால் துயருற்றுச் சோர்ந்தாள் அவள்.

இரவுநேரம் வந்தது. தனிமையில் படுக்கைக்குச் சென்ற அவள் உறக்கங் கொள்ளாமல் 'என்ன செய்வது? என்ன செய்வது?' என்றே எண்ணிக்கொண்டிருந்தாள். இறுதியாக ஒருவித உறுதியான முடிவுடன் ஆண் உடை அணிந்து, வருவது வரட்டுமென்று துணிந்து, இரவோடிரவாகப் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிச் சென்றாள் சொக்கி.

நள்ளிரவு நேரம்; ஊரே அயர்ந்து உறங்கும் வேளை, தெருவிலே குரைத்துத் திரியும் தெரு நாய்களையும், ஊர் காவல் புரியச் சுற்றிவரும் காவல்வீரர்களையுந் தவிர வேறு யாருமே தெருவில் நடமாட்டமின்றி ஓய்ந்திருந்த வேளை; அயர்வுடன் உறங்கிக்கொண்டிருந்தான் வெள்ளையத் தேவன்.

அப்பொழுது அவனுடைய அறைக்குள்ளே ஆண் உடையில் நுழைந்தாள் சொக்கி. நல்ல உறக்கத்திலிருந்த தேவன் அவள் வருகையை உணரவில்லை; காவலரும் அறியவில்லை. அவன் மார்பிலே வெண்மையான ஆடை போர்த்தி மூடப்பட்டிருந்தது. புண் எவ்வளவு கடுமையானது என்று காணத் துடித்தாள் சொக்கி. அளவு கடந்த ஆசையால் நேரத்தையும் இடத்தையும் மறந்து மெல்ல அப் புண்ணை மூடி மறைத்திருந்த மேலாடையை நீ... ...னாள். அங்கிருந்த மங்கலான வெளிச்சத்திலும் வாளால குத்தூண்ட அவ் வடுவின் கொடுமையை அவள் கண்டாள். அதன் கோரத்தைக்கண்ட அவள் உள்ளம் மறந்தாள்; நேரமும் நிலையும் மறந்தாள்; 'ஐயோ!' என

அவள் வாய் முணுமுணுத்தது. வீரமும் திண்மையும் நிறைந்த அவள் உள்ளங் கசிந்து உருகியது; கண்களி லிருந்து தாமாக வடிந்த நீர்ப் பெருக்கை அவளால் தடுக்க முடியவில்லை. நிலைபெற்ற கற்சிலைபோல் நெட்டுயிர்ப் புடன் நின்றுவிட்டாள் அவள்.

மார்பிலே நீர்த்துளிகள் விழுந்ததால் திடுக்கிட்டுக் கண் விழித்த தேவன் 'யார் அது' என்று அதட்டினான். அதைச் சிறிதும் எதிர்பார்க்காத சொக்கி திடுக்கிட்டாள். மயக்கத் தின் நீங்கினார் பிதற்றுவது போன்று 'நான்தான்! நான் தான்' என்றாள்.

'நானென்றால் யார் நீ? எனக்குப் புரியவில்லையே?' என்றான் தேவன்.

'சொக்கி' என்றாள் அவள்.

'சொக்கியா!' தேவன் உள்ளத்தில் ஆயிரமாயிரம் சிந்தனைகள் தோன்றி மறைந்தன. அவளோ அவனை நெருங்கி அவன் தலைமயிரைக் கோதிக்கொண்டிருந்தாள்.

'சொக்கி!' என்னதான் நாமிருவரும் நேசித்தாலும்' இந்நேரத்தில் நீ இங்கு வரலாமா? யாராவது உன்னைக் கண் டால் என்ன நினைப்பார்கள்?' என்று அந்த மகிழ்விலும் சமூகத்தை நினைந்து அவளைக் கடிந்துகொண்டான் தேவன்.

'உங்கள் மார்பின் வடுவைப் பற்றி என் தந்தையின் மூலம் கேட்டதுமே என் உள்ளக் கொதிப்பை அடக் கவே முடியவில்லை. உங்களைக் காணாத உள்ளம் அமைதி கொள்ளாது. ஆதலால் யாருமறியா வேளையில் எவரும் காணாது மறைந்து மறைந்து இங்கு வந்தேன்' என்றாள் அவள்.

பிரியா விடைபெற்றுப் பிரிந்தனர் அவர்கள். உயிரை அங்கேயே நிறுத்திவிட்டுச் செல்வது போன்றவொரு கவலையுடன் ஊரைநோக்கிச் சென்றாள் சொக்கி.

காலையிலே கண்விழித்த தேவனுக்கு நள்ளிரவிலே அவள் வந்தது கனவா நனவா என்றே புரிந்துகொள்ள முடியவில்லை.

10. பஹதூர் வெள்ளை

பொழுது விடிந்ததும் இரவில் வந்த சொக்கியின் அன்புள்ளத்தை எண்ணி எண்ணி, மறக்கமுடியாமல் விளங்கும் அம் மங்கையின் பாசத்திலே மனத்தைப் பறிகொடுத்தவனாக படுத்துக்கொண்டிருந்தான் தேவன். அந்த உள்ள மகிழ்ச்சியிலே புண்ணும் இரண்டொரு நாட்களில் நன்றாக ஆறிவிட்டது.

இராமநாதபுரப் போரிலே வெள்ளையத்தேவன் காட்டிய வீரத்தைப் பாராட்டவேண்டும் என விரும்பினர் பாஞ்சாலங்குறிச்சி மன்னரும் பிறரும். அவர்கள் விருப்பத்தை உடனே நிறைவேற்ற இயலாத வகையில் வெள்ளையத் தேவன் பட்ட காயம் தடுத்தது. எனவே புண் நன்றாக ஆறி அவன் உடல் நலம் செம்மை பெற்றதும் அப் பாராட்டு விழாவை நடத்துவதென்று அவர்கள் முடிவு செய்தனர்.

இப்பொழுது புண்ணும் காய்ந்து பதக்கம் போன்ற வடுவாக மாறிவிட்டது. வெள்ளையத்தேவனும் படுக்கையினின்று எழுந்து நடமாடவும், ஆர்வமுடன் மீண்டும் பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடவும் தொடங்கிவிட்டான். எனவே அவ் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்னர் அவனையும் அழைத்துவர ஆள் அனுப்பினர் மன்னர்.

அவன் அரண்மனையை அடைந்தபோது சபை நிரம்பி யிருந்தது. கலைஞர்கள், அறிஞர்கள், வீரர்கள், அமைச் சர்கள், பொதுமக்கள் அனைவருமே அங்கு மகிழ்வுடன் குழுமியிருந்தனர். வெள்ளையத் தேவன், அந்தச் சபை யில் நுழைந்ததும் அனைவருக்கும் வணக்கம் செலுத்தி விட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தான். அப்போது அச் சபையிலே பெரும் ஆரவாரமான வாழ்த்தொலிகள் எழுந்தன.

அடலேறு போன்று வரும் தம் அன்புச் செல்வனை யும், அவன் ஆற்றலைக் கண்டு அவையினர் அடைந்து நிற்கும் மகிழ்ச்சிப் பெருக்கையும் கண்ட, கட்ட பொம்மு வேந்தர் பெரிதும் களிப்படைந்தார்.

இராமநாதபுரப் போரிலே வெள்ளையன் காட்டிய வல்லமை அனைத்தையும் வெளிப்படத் தம் வாயாலேயே கூறி மகிழ்ந்தார். பாஞ்சையின் பெருமையைக் காப் பாற்றிய செயலில் பெரு வீரங் காட்டிய தேவனைப் பாராட்ட வேண்டாமா?' என்றார்.

'பாராட்ட வேண்டும்!' என்றனர் அவையோர்.

'நம் வெள்ளையத் தேவன் இனி, இன்றுமுதல் 'பஹதூர் வெள்ளையத் தேவன்' என்று அழைக்கப்படு வான். பஹதூர் என்ற சிறப்புப் பட்டத்தை அவனுக்குச் சூட்டி நாம் அவனைப் பாராட்டுகிறோம்' என்று கூறி அவனுக்குச் சில பரிசுகளையும் அப் பட்டத்திற்குரிய விருதுகளையும் வழங்கினர் கட்டபொம்முதுரை.

அன்றுமுதல் வெள்ளையத் தேவன் என்ற பெயர் மறைந்துவிட்டது. 'பஹதூர் வெள்ளை' என்ற பெயரே

31

நிலைத்தது. பிற்காலத்தில் அதுவே நாட்டுப்புற மக்களால் 'பாதர் வெள்ளை' என வழங்கப் பெற்றது.

பாஞ்சாலங்குறிச்சியினர் அனைவருமே அவனது ஆண்மையைக் கண்டு போற்றினர். தாம் சேற்றிலே கண்டெடுத்த செல்வன், தாம் அன்று கருதியதைவிடப் பதின்மடங்கு புகழுடன் விளங்கக் கண்டார் மன்னர். தன் ஆட்சியின் உருக்குத் தூண்களில் ஒன்ருக இருக்க வுங் கண்டார். எனவே கட்டபொம்முதுரையின் மகிழ்ச்சியே அனைவரினும் அதிகமாயிருந்தது.

11. போர் முரசு

இராமலிங்கவிலாசப் போரினல் பெரிதும் அவமான மடைந்த ஜாக்ஸன் தனியே அகப்பட்ட தானுபதிப் பிள்ளையைக் கைதுசெய்து திருச்சிக்கு அனுப்பினன். பிள்ளைமகன் திருச்சியிலிருந்த கும்பினி நிர்வாகிகளிடம் ஜாக்ஸனின் கொடுஞ் செயல்களைப்பற்றி விளக்கிக் கூறினர். அவருடைய சொல்வன்மை கும்பினியாரைக் கவர்ந்தது ; உண்மையை அவர்களும் உணர்ந்தனர் ; அவரை உடனே விடுதலை செய்ததுடன் ஜாக்ஸனையும் வேலையைவிட்டு நீக்கிவிட்டனர்.

தானுபதிப்பிள்ளையின் ஆலோசனையின்மேல் கட்ட பொம்முதுரை தம் பரிவாரங்களுடன் சிவிகை ஏறி மதுரைக் கோட்டைக்கும், பின்னர் அங்கிருந்து திருச்சிக் கோட்டைக்கும் சென்றூர். அவரை விமரிசையாக வர வேற்று மரியாதைகள் செய்து அவருடைய் நட்பையும் விரும்பினர் கும்பினியார். ஜாக்ஸன் செய்த கொடுமை களுக்காகவும் வருந்தினர்.

வரிசைகள் பல அளித்து அவரை வழியனுப்பினர். மகிழ்வுடன் தம் நாட்டைச் சேர்ந்தார் தென்னாட்டுச் சிங்கம். பகையொழிந்தது என மகிழ்ந்தனர் அனைவரும்.

அதன்பின் சரித்திரத்திலே வருந்தத்தக்க சம்பவங்கள் பல நடைபெற்றன. சூழ்நிலைகள் பெரிதும் மாறுபட்டு வந்தன. அங்ஙனமிருக்கையில் தானுபதியின் மகனுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. மனமகிழ்ந்த வீரபாண்டியன் இரண்டாயிரம் பொன்னும் நூற்றைம்பது கோட்டை நெல்லும் மனமுவந்து உதவினன். ஆனால் தானுபதிப் பிள்ளையோ சேனைத்தலைவன் சின்னமாவேரி நாயக்கனையும் அவன் ஐந்நூறு வீரர்களையும் அனுப்பிக் கும்பினியார் ஸ்ரீவைகுண்டத்து நெற்களஞ்சியத்தில் சேமித்து வைத்திருந்த நெல்லை எல்லாம் கொள்ளையடித்து வருமாறு செய்தான். அக் கோட்டையைக்காத்த பாண்டியத் தேவனும் படுகொலை செய்யப்பட்டான்.

அது கண்டு கும்பினியார் சீறினர். 'தானுபதியைத் தம்மிடம் ஒப்புவிக்கவேண்டும், என்றனர். வீரபாண்டியர் அவர் செயலுக்கு வருந்தி அவரைக்கடிந்து கொண்டாலும், நஷ்டஈடுதர இசைந்தாரே தவிர, அவரைத் தஞ்சமாக அடைந்த பிள்ளை மகனைக் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை.

அத்துடன் வரிப்பணம் செலுத்தவில்லை யென்று கடிந்து நிருபமும் எழுதியிருந்தனர் கும்பினியார்! வரிப் பணமா? ஏன் செலுத்தவேண்டும் என்ற ஒலி எங்கும் எழுந்தது.

" வானம் பொழியும் பூமி விளையுது
மன்னவன் கும்பினிக் கேன்கொடுப்பேன்?

சீனிச்சம் பாநெல்லு ஏன் கொடுப்பேன்? அந்தச்
சீரகச் சம்பாநெல் என் கொடுப்பேன்?
என்னைப்போல் வெள்ளாமை இட்டாறு துரை
இங்கி லீசு வெள்ளைக் காரனுந்தான்?
மன்னவன் கும்பினி வந்தாக்கால் கத்தி
வாள்முனை யில்கிஸ்திப் பண" மென்றான்.

என்ற பாட்டு நாட்டினரின் இதயக் குரலை வெளிப்படுத்துகின்றது.

கலெக்டர் லூஷிங்டன் கமுதியில் வந்து தன்னைச் சந்திக்குமாறு கட்டபொம்முதுரைக்கு எழுதினார். கட்டபொம்முவோ நாட்கடத்தினர். 'வீரபாண்டியனின் நிலைமை மிகவும் கட்டுக்கடங்காததாகிவிட்டது. உடனே பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றவேண்டும் என்று சென்னைக் கவர்னருக்கு எழுதினான். அப்போது கவர்னராயிருந்த லார்டு கிளைவும் 'மேஜர் பானர்மன் என்பான் தலைமையில் பெரும்படை யொன்றைத் திருநெல்வேலிக்கு அனுப்பினான்.

1799–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14–ம் தேதியன்று பானர்மன் திருநெல்வேலியிருந்த ராணுவத்தின் தலைமைப் பதவியை ஏற்றான். கட்டபொம்முதுரையை வஞ்சகமாகக் கைது செய்ய எண்ணித் தன்னை வந்து உடனே காணுமாறு எழுதினான். அவரோ அவன் வஞ்சகத்தை யறிந்து ஒரு வாரத்திற்குள் வருவதாகச் சொல்லியனுப்பினார். தன் அரசியல் தந்திரம் பலிக்காது என உணர்ந்த பானர்மன் தக்க சமயத்தில் படையெடுத்துச் செல்ல எண்ணினான்.

அச்சமயத்தில் திருச்செந்தூரிலே செந்திலாண்டவனுக்குத் திருவிழா நடந்துகொண்டிருந்தது. கடற்கரையிலே கோயில்கொண்டிருக்கும் செந்தில் முருகன்

பாஞ்சைப்பதியினரின் குலதெய்வம். எனவே அத் திருவிழாவிற்கலந்து முருகனைப் பணிந்து போற்ற ஊமைத் துரையும் அவர் தம்பியரும் வீரர்கள் பலரும் அங்குச் சென்றிருந்தனர். தானுபதிப் பிள்ளையும் ஸ்ரீ வைகுண்டத்திற்கு அருகிலுள்ள ஆற்றூருக்குச் சென்றிருந்தார். அதுவே பாஞ்சைப் பதியைத் தாக்கத் தக்க சமயம் என நினைத்தான் பானர்மன். இரவோடிரவாகத் தன் பெரும் படையுடன் புறப்பட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் எல்லையை அடைந்தான். ஓட்டப் பிடாரத்திலே முகாம் அமைத்துக்கொண்டு **டல்லாஸ்** என்பவன் தலைமையில் கோட்டையைத் தகர்க்க ஒரு பீரங்கிப் படையை அனுப்பினான்.

1799-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் காலைநேரத்தைத் தமிழகம் என்றுமே மறந்து விட முடியாது. காலைக் கோழி கவலையின்றிக் கூவிற்று: வெள்ளையர் கூலிப்படை வந்து நிற்கிறது; இன்னுமா தூக்கம் எனக் கூவி அழைத்து மக்களை எழுப்புவது போன்றிருந்தது அக்குரல். 'பார் இதோ வஞ்சகம்' என மூடியிருந்த இருள் மறைந்து ஒளியும் தோன்றிற்று.

கோட்டைக் காவலர்கள் காலை நேரத்தில் கண்விழித்ததும் கும்பினிப் படைகளைக் கண்டு நெஞ்சம் கொதித்தனர். பசும்புல் வெளியிலே மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்கூட்டங்களுக்குப் பதிலாகக் குடித்துக் கூத்தாடித் திரியும் கும்பினிப் படைகளைப் பார்த்தனர். போர் முரசங்களை மண்ணும் விண்ணும் அதிர முழங்கினர். போர்! போர்! என்ற குரல் எங்கும் எழுந்தது.

கட்டபொம்முதுரை மனந்தளரவில்லை. சக்கதேவியினை வணங்கிப் போருக்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைதியுடன் செய்வதில் முனைந்தார்.

வெள்ளையத் தேவனது காதுகளிலும் போர் முரசங்களின் ஒலி விழுந்தது. மார்புக் காயம் முற்றிலும் ஆறுவதற்கு முன்னரே மற்றொரு கடுமையான போருக்கு அவன் தயாராக வேண்டியவனானான்.

வெள்ளைக் கொடிதாங்கிக் கட்டபொம்முதுரையைப் பேட்டிகாண வந்தார் இராமலிங்க முதலியார் என்பவர். மேஜர் பானர்மன் அவரைத் தூதனாக அனுப்பியிருந்தான்.

'சமூகம் சினம் தணிந்து தளபதியைக்கண்டு பேசினால் அமைதி ஏற்படும்' என மொழிந்தார் முதலியார்.

'அமைதியை விரும்பித்தான் படையுடன் வந்தீர்கள் போலும். போர்முரசம் முழங்கியாயிற்று. இனி வாள் முனையிலேதான் பேச்சு' என்று கூறியனுப்பினார் கட்டபொம்முதுரை. பாஞ்சைப் படைகள் போருக்கு அணிவகுத்து நின்றன.

" ஒன்று போலே சோமன் கட்டினராம்,
அங்கே உருமால் சுங்கு விட்டுக் கட்டினராம்,
பொன்னும் சவ்வாது பொட்டணிந்தனராம்,
கடைக் கண்ணுக்கு மையிட்டுச் சிறந்தனராம்"

என்று கூறுகிறார் கவிஞர் ஒருவர் படைவீரர்களின் அணிவகுப்பைப்பற்றி. வீரத் தாய்மார் தம் மைந்தரின் கால்களுக்கு வீரக்கழல் அணிவித்து வாழ்த்தி வழியனுப்பினர். மனைவியர் தம் கணவருக்குத் திலகமிட்டு ஆலத்தி சுற்றி வழி அனுப்பினர். தினவு மிகுந்த திண்தோள் வீரர்கள் தெருவெலாம் திரண்டு நின்று ஆர்ப்பரித்தனர்.

போருக்குச் செல்லுமுன் தன் காதலியைக் கண்டு விடைபெறச் சென்றான் வெள்ளையத்தேவன். அவளோ

முதல் நாள் இரவிலேகண்ட தீய சொப்பனத்தை எண்ணி எண்ணி உருகிக்கொண்டிருந்தாள். போருக்குச் செல்லல் ஆகாதென்று அவள் அவனை வேண்டினாள். மனத்திலே கணவனாக வரித்தும் மணம் பெறாது துடித்த அவள் மிகவும் உருக்கமான சொற்களில் மன்றாடிக் கெஞ்சினாள்; பழம்பாடல் ஒன்று அவள் நெஞ்சத்துயரை எவ்விதங் கூறுகிறதென்று பாருங்கள்:-

"போகாதே போகாதே என் கணவா,
 பொல்லாத சொப்பனங் கண்டிருந்தேன்.
நெஞ்சம் பதறுதே என் கணவா,
 நினைத்த காரியம் சொல்ல வென்றால்.
இஞ்சிக் கிணறும் இடியக்கண்டேன்,
 எலுமிச்சந் தோட்டம் அழியக் கண்டேன்.
மங்கைக் கிணறு மிடியக் கண்டேன்,
 மாமரச்சோலை யழியக் கண்டேன்.
வாசலில் நின்ற முருங்கைமரம்,
 வம்பாய் விழக் கனவு கண்டேன்.
மேகமில்லாமல் இடிக்கக் கண்டேன்,
 வீரனே உன் தலை போகக் கண்டேன்.
கோட்டையில் பீரங்கி பாயக் கண்டேன்,
 கூண்டோடே கைலாசம் சேரக்கண்டேன்
கூகை நின்று குளறக் கண்டேன்,
 கோபத்தில் ஆந்தை அலறக் கண்டேன்.
காகம் பறக்காத பாஞ்சையிலே,
 கருப்புச் சட்டைகள் உலாவக்கண்டேன்.
கயத்தாற்றிலே கட்டப்புளியிலே,
 கட்டபொம்மு தலை தொங்கக் கண்டேன்.
பட்டத்து யானைகள் வீறிடவே,
 பந்தயக் குதிரை சாகக் கண்டேன்.
சிட்டுப் பறக்காத பாஞ்சையிலே,
 சிவப்புச் சட்டை யுலாவக் கண்டேன்.

பொல்லாத சொப்பனம் கண்டதனால்,
செல்லாதீர் சண்டையில் மாண்டிடுவீர்.

என்று அவள் பலவாறாகச் சொல்லிப் புலம்பினாள்.

வெள்ளையத்தேவன் அவளைத் தேற்றினான். போக விடைதர வேண்டினான். அவன் ஆண்மையைத் தடை செய்ய அவளால் முடியாதென்பதை அவள் உணர்ந்தாள். கலங்கிய உள்ளத்துடன் 'சென்று வருவீர், தீராதி தீரரே என்துரையே!' என்று விடைதந்து அனுப்பினாள்.

12. போரும் முடிவும்

இராமலிங்க முதலியார் பானர்மன் என்பவனிடம் சென்று கட்டபொம்முவின் பதிலைக் கூறினார். கேட்ட பானர்மன், கோட்டையைச் சுற்றிலும் தன் படைகளை அணிவகுத்து நிற்குமாறு கட்டளை யிட்டான். கோட்டையின் தென்மேற்கு மூலையிலே பீரங்கிமேடை அமைத்தனர். வீரஞ்செறிந்த தமிழர் நிறைந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் மீது, 1799-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 5-ம் நாள் காலை சுமார் பத்து மணிக்கு வெள்ளையனின் பீரங்கிக் குண்டுகள் பாய்ந்தன.

படையணிகளிற் சுற்றி வந்து உற்சாகமூட்டிவந்த கட்டபொம்மு அங்கே வெள்ளையத்தேவனைக் காணாது திடுக்கிட்டார். அவன் எங்கே சென்றானென்று வினவினார். அவ்வளவில் சுந்தரலிங்கம் என்பானொரு வீரன் வெள்ளையத்தேவனைத் தேடிச் சொக்கியின் வீட்டிற்கு விரைந்து ஓடினான். சொக்கியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேவந்த பாதர்வெள்ளையைச் சுந்தரலிங்கம் கண்டான்.

'சீவிமுடித்துச் சிங்காரக் கொண்டையிட்டுக்கோணல் தலைப்பாகையுடன் கச்சை வரிந்து கட்டி' இளங்காளை போல நின்றான் பாதர்வெள்ளை.

சுந்தரலிங்கம் வந்து 'அப்பன் அழைக்கிறார்' என்றான்.

'வந்து விட்டேன்' என்று குதிரையின் மீது பாய்ந்து ஏறினான் தேவன். 'கத்தி நல்ல இடையிலிட்டு, கண்டாக் கோடாலி தோளிலிட்டு, ஈட்டி நல்ல சமுதாடு, இடது கையினில் அங்குசமும், பட்டாக் கத்தியைத் தானெடுத்துப் பாங்குடன்' வந்துகொண்டிருந்தான் அவன்.

அவனும் சுந்தரலிங்கமும் ஏறிவந்த குதிரைகள் காற்றாகப்பறந்தன; பேய்போல் ஓடின. அவை சென்ற வேகம் எப்படியிருந்த தென்று பாருங்கள்:—

ஒட்டாரங்காடு உடங்காடு,
 ஓடிவருகுதாம் பேய்க்குதிரை.
சில்லரைக்காடு செடிக்காடு,
 சிட்டாய்ப் பறக்குதாம் பேய்க்குதிரை.
சின்னஞ்சிறிய கற்களெல்லாம்,
 செந்தூள் பறக்குதாம் முன்னாலே.
முன்னாலே இரண்டடி பாயுதுபார்,
 பின்னாலே இரண்டடி தாவுதுபார்,
காடு செடி மலை தான் கடந்து,
 கடுகிப் போறாராம் பாதர்வெள்ளை.
கட்டுக் கடங்காத பாதர் வெள்ளை,
 காவலன் குதிரை போகுதுபார்.
பறக்கின்ற தொரு பட்சிபோல,
 பறந்துபோகுதாம் பேய்க்குதிரை.
மூடின கண்கள் முழிக்கு முன்னே,
 மூன்று மைல் தூரம் போகுதுபார்.
ஒட்டப்பிடாரத்தை நேர்பிடித்து,
 ஓடிவருகுதாம் பேய்க்குதிரை.
பாரமலை போலே ரெண்டுபேரும்,
 பாஞ்சால நாட்டையுங் கண்டுவிட்டார்.

அவ்வாறு வந்து, இருவரும் பாஞ்சைக் கோட்டை வாயிலையடைந்து எதிர்த்தாரைக் கொன்றுகுவித்து வழி செய்துகொண்டு உள்ளே புகுந்தனர். கட்டபொம்மு துரையின் முன்னர் சென்று நின்று வணங்கினர்.

அதற்குள் வெள்ளையரின் பீரங்கிகள் அலறின. பாஞ்சாலங்குறிச்சியின் வீரர்களும் போர்முனை நோக்கிச் செல்ல நின்றனர். சிவத்தையா வடக்குக் கோட்டை வாயிலைக்காத்து நிற்பதென்றும், வெள்ளையத் தேவன் தெற்குப் பகுதியைக் காப்பதென்றும் கட்டபொம்மு ஆணையிட்டார்.

கண்டவர் கண்டு நடுநடுங்கி ஓடிப் பதுங்கும்படியாகக் **'காலன்'** எனும் படைத்தலைவன் கும்பினிப் படையணிகளைக் கோட்டைக்கு வெளியே திரட்டி அணி வகுத்து நிறுத்தியிருந்தான். வெள்ளையத்தேவனுடன் வடக்குக் கோட்டைவாயிலின் பக்கம் சென்ற கட்டபொம்மு அதை வெள்ளையத்தேவனுக்குச் சுட்டியவாறே 'அதோ பார்' என்று காட்டினார். அதனைக் கண்டதும் தேவனின் கண்கள் சிவந்தன, பெருங் கோபங் கொண்டான். அவனிருந்த நிலையில் உலகையே ஒழித்து விடுபவன்போல் விளங்கினான்.

இடிபோலக் குமுறின கும்பினிப் பீரங்கிகள். பாஞ்சை வீரர் பலர் மார்பிலே குண்டுகள் பாய்ந்தன. எங்கும் பிணக் குவியல்கள் மலிந்தன. கொட்டிய குருதி இரத்த ஆறாகப் பெருகி ஓடியது. கரும் புகையின் படலம் வானிலே ஓங்கி எழுந்தது. வெடி மருந்தின் நெடி எங்கும் சூழ்ந்தது.

அந் நிலையிலே கும்பினிப் படைகளின் நடுவே கோளரிபோற் புகுந்து வெட்டிச் சாய்த்தான் வெள்ளை

யத் தேவன். ஓடி ஓடி வெட்டினான்; வலது கையினாலும் இடது கையினாலும் வெட்டிச் சாய்த்துக்கொண்டே சென்றான். அவன் கை வாள் குருதிக்கறை படிந்து செந் நிறமாக விளங்கியது.

நேரம் ஆக ஆகப் பீரங்கிக் குண்டுகள் மும்முரமாக முழங்கிக்கொண்டிருந்தன. நீண்டநேரம் கோட்டை தாக்குப்பிடிக்காதென்பதை வெள்ளையத்தேவன் உணர்ந் தான். எனவே:

"கோட்டையின் நிலைமை அபாயகரமாயிருக்கிறது. நெடுநேரம் தாளாது. கடைசி மூச்சுவரை போராட நாங் கள் உறுதிகொண்டுவிட்டோம். நீங்களும் மற்றவர்களும் மறைவு வழியின் மூலம் வெளியேறிவிடுங்கள்' என்று கட்டபொம்முவிற்குச் செய்தி சொல்லி அனுப்பினான்.

நெடு நேரமும் ஈடுகொடுத்துக் கொண்டிருந்த பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைச் சுவரில் ஒரு பகுதி பீரங் கிக் குண்டுகளுக்கு இலக்காகிச் சரிந்தது. சிறிய சந்து போன்ற இடைவெளி தோன்றியது. கும்பினிப் படை யினர் அதைக் கண்டு கும்மாளமிட்டனர். 'காலன்' எனுந் தளபதியுடன் அவ்வழியாகக் கோட்டையின் உட்செல்ல முயன்றனர்.

வெற்றி மிடுக்குடன் காலன் வேகமாக இடிந்த கோட்டைப் பகுதியின் வழியாக உள்ளே வருவதையும் அவனைத் தொடர்ந்து பலர் மகிழ்வோடு வருவதையுங் கண்ட தேவன் துடிதுடித்தான். வேலாயுதத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு வேகமாகக் குதிரையுடன் பாய்ந்து அங்கே வந்தான்.

லெப்டினன்ட் காலின்ஸ் என்று சொல்லப்படும் 'காலன்' என்பவன் தீரமிகுந்தவன்! வெறிகொண்ட

வேங்கைபோலக் கோட்டைச் சுவரிலே சந்துபட்ட இடத்தை நோக்கிப் பாய்ந்துவந்த தேவனின் கைவேல் அவன் உடலை நோக்கிப் பாய்ந்தது; அவன் சாய்ந்தான். அவன் உடலை ஊடுருவிப் பாய்ந்து சென்ற நெடு வேலுடன் அவன் கீழே விழுந்த காட்சி, தமிழ் மரபினுக்குக் கேடு விளைத்த ஒருவனைக் கழுவேற்றியது போன்றிருந்தது.

காலனைத் தொடர்ந்துவந்த மற்றொரு ஆங்கில வீரன் உடனேயே கைத் துப்பாக்கியினால் வெள்ளையத் தேவனைச் சுட்டு வீழ்த்தினான். மார்பிலே குண்டு பாய்ந்தது. சுட்டவனையும் வெட்டி வீழ்த்தியபின் தளர்வடைந்து ஓய்ந்து சாய்ந்துவிட்டான் தேவன்.

அவன் இறந்த செய்திகேட்ட கட்டபொம்மு கண்ணீர் விட்டுக் கலங்கித் துடித்தார்; வாய்விட்டு அலறினார்.

காலன் துரை இறந்த செய்தி கேட்டுப் பானர்மனும் உள்ளம் வருந்தினான். ஒரு சிறந்த தளபதியை இழந்து விட்ட சோகம் அங்கும் காணப்பட்டது.

இருபுறமும் நிலவிய சோகத்தின் காரணமாகப் போர் முனையிலே ஒருவித அமைதி நிலவியது. தங்கள் தங்கள் தளபதிகளை இழந்த படைகள் அவர்களை நினைந்து வருந்தி அவர்கட்கு மரியாதை செய்ய முனைந்தன.

வீரம் மிகுந்த வெள்ளையத்தேவன்; கொல்லேற்றையும் எளிதிலே அடக்கியாளும் திறனுடைய தீரன், வேங்கையை வென்ற ஆண்மையுடையவன் மறைந்தான். கண்டார் நடுங்கும் அவனுடைய கட்டமைந்த உடல் குருதி வெள்ளத்திலே மிதந்தது. முகத்திலே வெற்றிப் புன்னகையுடன் காலனைக் கொன்றேன், வெள்ளையர் தள

பதியை வீழ்த்தினேன் என்ற இறுமாப்புடன் அவன் கிடந்தது போலத் தோன்றியது.

தன் காதலன் கதி என்ன ஆகும் என்பதைக் கவனிப்பதற்காகச் சொக்கியும் ஆண்உடை தரித்துப் படை வீரர்களுடன் போர் முனையிலே தலை மறைவாய்த் திரிந்து வந்தாள். காலன் வீழ்ச்சிக்குப்பின் தன் காதலன் துப்பாக்கிக் குண்டினால் மரணம் அடையவே, அவள் கலக்க முற்றாள். ஓடோடி வந்து, அவனது உடலைக் கட்டிக்கொண்டு கண்ணீர்விட்டுக் கலங்கினாள்.

மாண்டவன் மீண்டும் வருவானா ? தன் காதலனின் வேலாயுதத்தை, எதிரியின் மார்பிலிருந்து பிடுங்கித் தன் மார்புக்கு நேரே ஓங்கினாள் ! "வெற்றியளித்த வீரவேலாயுதமே! இதோ, நீ என் மார்பை முத்தமிடு!" என்று சொல்வது போலிருந்தது அவளது அப்போதைய நிலை.

"ஏ வீர மகளே ! எதற்காக உன் அருமைக் காதலன் உயிர் நீத்தான் ? தெற்கு வாசலைக் காப்பதற்காக அவன் தன் வீரத் திருமார்பில் துப்பாக்கிக் குண்டுகளை ஏற்கவில்லையா ? அவன் செய்த காரியத்தை அவனுக்குப் பின் நீ ஏன் செய்யக் கூடாது ? தற்கொலை செய்துகொள்ளாதே ! போர் செய்து மடி !" என்று அவள் மனம் சொல்லிற்று. உடனே மார்புக்கு நேராகப் பிடித்திருந்த வேலாயுதத்தைக் கையிலே தாங்கினாள்; அதற்கிடையே போர் முழக்கமும் நின்று பீரங்கிகளும் ஓய்ந்திருந்தன.

நள்ளிரவு ! எங்கும் பிணங்கள் மலை மலையாகக் குவிந்துகிடந்தன, அந்நேரத்திலே மாண்டுகிடந்த காதலனை விட்டுச் செல்லவும் இயலாது அவள் மனம் தவித்தது. அவன் முகத்தைப் பார்த்துத் தேம்பித் தேம்பிக் கண்ணீர் வடித்தாள்.

அந்நேரத்தில், கோட்டையின் நிலைமை என்ன? அதன் உள்ளே இருப்பவர்கள் என்ன ஆனுர்கள்? என்பதை அறிவதற்காகச் சில வெள்ளைக்காரர் வந்தனர். அவர்களைக் கண்ட சொக்கிக்கு ஒரே ஆத்திரம் மூண்டது. தன் காதலன் மரணத்துக்குக் காரணமாயிருந்தவர்கள் மீது வஞ்சம் தீர்க்கத் துணிந்தாள். அந் நடு இரவிலே அவர்கள் சற்றும் எதிர்பாராத ;விதமாகக் குபீரெனப் பாய்ந்து பாய்ந்து அவள் கையிலிருந்த வேலாயுதத்தினுல் குத்தினுள். பத்திரகாளிபோல அவர்களைச் சின்னு பின்னஞ் செய்தாள். துப்பறிய வந்தவர்கள் திகைத்தனர்.

அந்தப் போரிலே அவள் வெற்றியையா எதிர்பார்த்தாள்? வீர மரணத்தைத்தான் எதிர்பார்த்து அவள் போராடினுள். சில நிமிடங்களில் ஒரு கும்பினி வீரனது வாள் அவள் மார்பிலே பாய்ந்தது, ஓவென்று கதறியபடியே குப்புற வீழ்ந்தாள். ஏற்கனவே வீரசுவர்க்கம் புகுந்த வெள்ளையத் தேவனது தலை தன் காதலியின் வீரப் போரைக் கவனித்தபடியே அங்கே கிடந்தது! தன் மார்பிலே வாள் பாய்ந்ததும் தேவன் மாண்டுகிடந்த இடத்திற்குத் தள்ளாடித் தள்ளாடிச் சென்று அவன் மேல் விழுந்து அவளும் உயிர்நீத்தாள். அவளது காதல் உள்ளத்திலும் அமைதி நிலவியது! அவ்வாறு மரண பூமியிலே சாவிலும் இணைபிரியாது அவர்கள் விளங்கிய காட்சியானது, ஒரு மாண்பு மிக்க காட்சியே அல்லவா? முதலிற் சென்ற உயிருடன் தொடர்ந்து சென்ற உயிரும் சேர்ந்து அழியா நிலை பெற்றது!

ஆழந்தெரியாது காலை விட்டுக்கொண்ட மேஜர் பானர்மென், முதல் நாள் போரிலே, எதிர்பாராத பெரும் நஷ்டத்தை அடைந்தான். அது மட்டுமல்லாமல், தளபதிகளிலே மிகவும் வல்லமைசாலியான காலின்ஸ் எனும்

காலனையும் இழந்தான். அவைகளால் அவன் மனத்தில் எப்படியாவது பஹதூர் வெள்ளையைத் தந்திரமாகச் சிறை பிடித்துவிட்டால், அடுத்த நிமிடமே ஆங்கிலப் படைகளுக்குப் பாஞ்சாலஞ்குறிச்சியை வெல்வது வெகு எளிது என்று தோன்றிற்று.

அப்பப்பா! வெள்ளைத்துரையின் பெயரைக் கேட்டவுடனேதான், எப்படி நடுங்குகிறது கும்பினிப் பட்டாளம்! அதை நினைக்கும்போது அவனுக்கு அடக்க முடியாத ஆத்திரம் பொங்கியது. போர் முனையிலிருந்து திரும்பிவந்த மற்றைய தளபதிகளுடன் யோசித்தான். எல்லோருமே வெள்ளைத்துரையை முதலிற் சிறை பிடிப்பதுதான் நல்லதென்று கூறினர்.

விடிந்ததும், வெள்ளையத் தேவனைப்பிடித்துத் தருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய்கள் வெகுமதி கொடுப்பதாக அறிவிப்பதென்றும் முடிவு கட்டினர்.

வெள்ளையத் தேவனின் போர் முறையை மேஜர் பானர் மென்னிடம் சொன்னவர்களெல்லாம் அவன் ஒரு அரக்கனிலும் கொடியவன் என்றும், திடீரெனக்காற்றைப் போலச் சுழன்று தாக்குவதிற் சிறந்தவனென்றும் சொன்னபடியால், மேஜர் பானர்மென்னும், அவனது தளபதிகளும் எங்கே திடீரென வெள்ளையத்தேவன் தங்கள் கூடாரத்துக்குள் புகுந்து தங்கள் அனைவரையும் எதிர்பாராத வகையில் அந்த அர்த்த ராத்திரியிலேயே தாக்கிக் கொன்று விடுவானோவென்று அஞ்சினர்.

தங்கள் படைகளுக்கு இரவு முழுவதும் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கும்படியும், எந்த நிமிஷத்திலும் வெள்ளையத்தேவன் மாயமாகத் தோன்றித் தொல்லைதரக் கூடுமென்றும் சொல்லி வைத்திருந்தனர்.

திடீரென வெள்ளையர் சண்டையை நிறுத்தியதும், வெள்ளையத்தேவன் தாக்கப்படும் முன்பே அவன் படைகளைக் கோட்டைக்குள் பின் வாங்கி நிறுத்தி வைத்ததும், பாஞ்சாலங்குறிச்சியாருக்குத் தப்பி ஓட மிகவும் வசதியாகப் பட்டது. ஆகையால் எஞ்சி நின்ற பாஞ்சாலங்குறிச்சிப்படையும் நள்ளிரவில் தப்பி ஓடி விட்டது. ஒரு சிலர் மட்டுமே எஞ்சியிருந்தனர். வெள்ளையத்தேவன் வீழ்ந்ததையும். சொக்கியின் வீர மரணத்தையும் கண்டு அவர்கள் துக்கித்தனர். அவர்களது சடலங்களையும் உடனே அடக்கம் செய்து விட்டனர்.

போர்முனையில் குண்டுகளும், கத்திகளும் ஓய்ந்து விட்டாலும்; குற்றுயிரும், குறை உயிருமாய்க் கிடப்பவர்களது ஓலம் ஓய்ந்தபாடில்லை. நள்ளிரவிலே அவர்களைத் தூக்கிப் பாதுகாக்கவோ, இருதரப்பிலும் ஆட்கள் இல்லை. வெள்ளையர்களும், அவர்களைச் சேர்ந்திருந்த கூலிப்படைகளும் துணிந்து தங்கள் கூடாரங்களை விட்டு வெளியே வரப் பயந்து பதுங்கிக் கூடாரங்களிலேயே கிடந்தபடியால், எங்கேயாவது ஒரு நாய் குரைத்தாலும், நரி ஊளையிட்டாலும் ஒவ்வொருவரும் அது வெள்ளையத்தேவனது மாயமோ என்றுதான் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர்.

மேஜர் பானர்மென், இரவு முழுவதும் தூங்கவேயில்லை. படுத்துப்பார்த்தான்; முகத்தை மூடிக்கொண்டான் ; புரண்டு புரண்டு படுத்தான் ; ஆயினும் வெள்ளையத்தேவனே அவன் கண் முன்பு எங்கும் நிற்பது போலிருந்தது ! அதனால் சற்று நேரம் படுத்துப் பின் எழுவான் ; யோசனை செய்வான் ; திடீரென அலறுவான். எங்கிருந்தோ வெள்ளையத தேவன் வந்து, தளபதி காலின்ஸைக் கொன்றது போலத் தன்மீதும் பாய்ந்து

வேற் கம்பினுற். குத்துவதுபோல அவனுக்குத் தோன்றும். உடனே உடைவாளை உருவிக்கொண்டு ஆவேசத்துடன் அந்த உருவெளித் தோற்றத்தின்மேல் பாய்வான் எண்ணுதன வெல்லாம் எண்ணி நடுநடுங்குவான்.

அவனைப் போலவே ஒவ்வொரு தளபதிகளும் இரவெல்லாம் 'என்ன நேருமோ? எந்த நேரத்தில் வெள்ளையத்தேவன் வந்து விடுவானே? எனப் பயந்து நடுநடுங்கிக்கொண்டே தூக்கமின்றிப் புலம்பிக்கொண்டிருந்தனர்.

இரவும் ஒருவாறு கழிந்தது.

13. வெள்ளைச்சாமி

முதல்நாட் போரிலேநடந்த நிகழ்ச்சிகள் பலவற்றைக் கண்டு மனம் உளைந்த 'பானர்மன்' வெள்ளையத் தேவனை எப்படியாவது தீர்த்துக்கட்டிவிட வேண்டுமென முயன்றான். வெள்ளையத்தேவன் துப்பாக்கிக் குண்டினல் மரணமடைந்த செய்தி அவனுக்குத் தெரியாது. தளபதியைக் கொன்ற அவன் பெயரைக் கேட்டதும் நடு நடுங்கும் படைவீரர்களுக்கு ஊக்க மூட்டிப் பாஞ்சைக் கோட்டையைத் தகர்க்குமாறு ஏவினன். இரண்டு நாட்கள் தாக்குதல் இடைவிடாமல் நடைபெற்றது. மூன்ருவது நாள். கோட்டை தகர்ந்தது. கும்பினிப்பட்டாளங்கள் குதூகலித்தன. வெற்றி முழக்கத்துடன் அழிபாடுகளினிடையே புகுந்து சென்றனர். ஆனல் அங்கிருந்து முன்னரே கட்டபொம்மனும் அவரைச்சேர்ந்தோரும் வெளியேறிவிட்ட செய்தியை அதன் பின்னரே அவர்கள் அறிய முடிந்தது. சூழ்ந்திருந்த

பெரும்படைகளின் கண்ணிற்படாமல் அவர்கள் எவ் வாறே வெளியேறி விட்டனர் என எண்ண எண்ணப் பானர்மனின் சீற்றமும் ஆத்திரமும் மிகுந்தது.

கோட்டையினுள் எஞ்சிநின்றவரைக் கைது செய்யவும் கொடுமைப்படுத்தவும் விரைந்து கொண் டிருந்தனர் கும்பினிப் படையாட்கள். அந்நேரத்திலே ஒரு வியப்பான சம்பவம் நடந்தது!

"பஹதூர் வெள்ளை எங்கே? கட்டபொம்மன் எங்கே?" எனக்கேட்டுப் பாஞ்சை மக்களையும் வீரர் களையும் அடித்துக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த நேரம்.

எல்லோரையும் போன்று செந்தில் முருகனின் விழாவைக்கண்டு மகிழச்சென்றிருந்தவன் வெள்ளைச்சாமி வெள்ளைச்சாமி ராமய்யத்தேவருடைய மகன்; சொக்கி. யினுடைய அண்ணன். அங்கிருந்து வீடுதிரும்பியவன் பாஞ்சைப்போரைப்பற்றிக் கேட்டுப் பதறினன். தந்தை போருக்குச் சென்று திரும்பாததை ஓரளவு பொறுத்துக் கொண்டானென்ருலும் அருமைத் தங்கையையுங் காணுத தால் உள்ளம் பதறி வருந்தினன்.

'வெற்றி வீரனை வெள்ளையத்தேவனைத் தேடியே அவள் போயிருக்கக்கூடும்' என்ற எண்ணம் எழுந்தது. அவ்வாருயின் வெள்ளையத் தேவனுக்கு என்ன துயர் நேர்ந்துவிட்டதோ! என அவன் கலங்கினன்.

அவனும் பெருவீரன்; உடற்கட்டும் உள்ளத் திண்மையும் மிக்கவன். எனவே, பளபளக்கும் நெடு வேலைக் கையேந்திப் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் பாய்ந்து சென்ருன்.

அங்கே கண்ட காட்சி அவன் உள்ளத்தைப் புண்படுத்தியது.

'பஹதூர் வெள்ளை எங்கே? எங்கே அவன்?' என்று கேட்டுப் பாஞ்சைவீரர்களிற் சிலரைக் கும்பினி. யாட்கள் சவுக்காலடித்துக் கொண்டிருந்தனர்.

'தெரியாது! தெரியாது!' என்றே சொல்லிக் கொண்டிருந்தனர் அவர்கள். அதைக் கேட்ட வெள்ளைச் சாமியின் உள்ளம் மகிழ்ந்தது. "வெள்ளையத்தேவன் தப்பி விட்டான்! அவனுடன் என் தங்கையும் தப்பியிருப் பாள்!" என்று அவன் எண்ணினன்.

அப்போது அங்கே காயம்பட்டுக்கிடந்த ஒருவன் வெள்ளைச்சாமியைத் தெரிந்தவனுதலால் 'வெள்ளையா! உன் தங்கையும் பஹதூர் வெள்ளையும்......' என்று நடந்ததைச் சொல்ல நினைத்துக் கூவினன்.

'வெள்ளையத்தேவன் அதோ!' என்முன் அதைக் கேட்ட மற்ருெருவன்.

பாய்ந்துவந்தனர் கும்பினி வீரர்கள். அவர்களிற் சிலர் வெள்ளைச்சாமியின் வேல் முனையினுல் குத்துண்டு வீழ்ந்த னர். எனினும் பலருக்குமுன் ஒருவன் எவ்வளவு நேரந் தான் நிலைத்துநின்று போராடிக்கொண்டிருக்க முடியும்!

முடிவில் வெள்ளைச்சாமி பிடிபட்டு விட்டான். 'பஹதூர் வெள்ளையைப்' பிடித்துவிட்டோம் எனக் கொக்கரித்தனர் பகைவர்கள்.

'வெள்ளைச்சாமி!' என்றழைத்துச் செய்திசொல்ல முயன்றவனே அந்தச் சொற்கள் விளைத்த கேட்டைக் கண்ட அதிர்ச்சியினுல் அக்கணமே உயிர் நீத்தான்.

'வெள்ளையத்தேன் அதோ' என்று கூவிக் காட்டிக் கொடுத்துக் காசு பெற முயன்ற கயவனே, அவன்தான் அவனுடைய மாமன் என்றும், அவனுடைய அட்டகாசத் தைக்கண்டு பொறுக்காமல் கும்பினிப் படைகளிடம் பிடித்துக்கொடுத்துவிடவே அங்கு வந்ததாகவும் கூறிக் கொண்டான்.

சந்தர்ப்பம் அவனுக்கு உதவியது. வெள்ளைச்சாமியை வெள்ளையத்தேவன் என்று கருதி ஏமாந்த கும்பினிப் படைத் தளபதி'பானர்மன்' அக்கயவனைப் பாராட்டினுன் அவனுடைய ராஜவிசுவாசத்தைப் புகழ்ந்து ஓராயிர ரூபாய்கள் பரிசும் அளித்தான். அவ்வாறே பாஞ்சைப் பதியை விட்டுத் தப்பிச் சென்ற பிறரையும் பிடித்துக் கொடுத்தால் அவர்களுக்கும் நிறையப் பரிசுகளும் பட்டங் களும் கொடுப்பதாகவும், அவர்கள் ராஜவிசுவாசிகள் என்று பாராட்டப்படுவார்கள் என்றும் பானர்மன் சொன்னுன். அதை நாடெங்கும் பறையறைந்து பரப் பினர் அவன் கையாட்கள்.

பிடிப்பட்ட வெள்ளைச்சாமியோ தன்னைப்பற்றி எதுவுமே எண்ணி வருந்தாமல், தன் தங்கையும் காதலனும் தப்பிச் சென்றுவிட்டனர் என்று எண்ணி மகிழ்ந்தான்; புன்சிரிப்புத் தவழ நின்றுகொண்டிருந்தான். சற்றேனும் மனவருத்தம் அடைந்ததாகவே தோன்ற வில்லை. தலை நிமிர்ந்து வெறுப்புடன் கும்பினிப்படை களை இகழ்ச்சி தோன்றப் பார்த்துக் கொண்டே கட்டுண்ட காளைபோல விளங்கினுன்.

பஹதூர் வெள்ளையைப் பிடித்துவிட்டோமென்ற ஆணவத்தினுல் வந்துகொண்டிருந்தான் மேஜர் பானர் மன். அவன் மீசை படபடவென்று துடித்தது.

கண்கள் சினத்தால் நெருப்புக் கங்குகள் போன்று விளங்கின. பற்களை நெறு நெறு வெனக்கடித்துக் கொண்டே வந்தான்.

'நீதானே வெள்ளையத்தேவன்?'' என்றான்.

வெள்ளைச்சாமி பதிலே பேசவில்லை. அவன் முகத்திலே புன்சிரிப்பு ஒன்றே தவழ்ந்துகொண்டிருந்தது.

'கேட்கிறேன், பதில் சொல்லாமல் நிற்கிறாயே! நீதானே பஹதூர் வெள்ளை என்பவன்' என அதட்டினான்.

அதற்கும் அவன் ஒன்றும் பதில் சொல்லாமலிருக்கவே பானர்மென் பெரிதுஞ் சினங்கொண்டான்.

வெள்ளைச்சாமியை நெருங்கிவந்து 'பதில் சொல்லப் போகிறாயா இல்லையா?' என்று கத்தினான்.

பானர்மனின் படபடப்பையும் ஆத்திரத்தையும், பார்க்கப் பார்க்கத் தன் நிலையையும் துயரையும் மறந்துவிட்டான் வெள்ளைச்சாமி.

'ஹா, ஹா!' என்று வாய்விட்டு உரக்கச் சிரித்தான். அதன் எதிரொலி கும்பினிப் படையினரின் உள்ளங்களில் அச்சத்தின் அலைகளாகச் சென்று பாய்ந்தது. 'ஏன் இவ்வாறு சிரிக்கிறான்? என்ன சூழ்ச்சி செய்திருக்கிறானோ?' என்று அவர்கள் திகைத்தனர்.

மறக் குலத்திலே பிறந்த நான் இவன் கோபத்தைக் கண்டு பயப்பட்டு விடுவேன் என்று நினைக்கிறான் என்று பக்கத்தில் நின்ற மொழி பெயர்ப்பாளனிடங் கூறினான் வெள்ளைச்சாமி.

'என்ன சொல்லுகிறான் !' என்று ஆவலுடன் கேட்டான் பானர்மன்.

வெள்ளைச்சாமிசொன்னவார்த்தைகளை மொழிபெயர்ப்பவன் ஆங்கிலத்தில் கூறியதும் பானர்மன் சீறினான்.

'கேள்விக்குச் சரியான முறையில் பதில் சொல்லாவிட்டால் என்ன நேரும் தெரியுமா ? உன் உடல் தூக்கிலே தொங்கும் ! சித்திரவதை செய்யப்படுவாய் !' என்று பயமுறுத்தினான்.

'தூக்குமேடை ! எத்தனையோ தியாகிகளின் உயிரைக் கொள்ளையிட்ட தூக்குமேடை ! உணர்வற்ற கொடுங் கயிறு ! உயிரைத்தானே போக்கும் ! என் உள்ளத்திலிருப்பதை உனக்குச் சொல்லி விடாதே ? என்றான் கலங்காத உள்ளத்து வெள்ளைச்சாமி.

'முன்னூறு கசையடிகள் கொடுங்கள் இம் மூர்க்கனுக்கு' என்று ஆணையிட்டான் பானர்மன்.

'பளீர் ! பளீர் !' என அடிகள் விழுந்தன. சவுக்கு அவன் சதையைச் சுவை பார்த்தது. கலங்காமல் 'ரத்த ஸ்நானம்' செய்பவன்போல நிமிர்ந்து நின்றான் அவன்.

அவன் படும் வேதனையைக் கண்டு மனம் மகிழ்ந்தான் பானர்மன்.

'இனியாவது சொல்லிவிடு ! இப்போதாவது உண்மையைச் சொன்னால் நீ பிழைத்துக் கொள்ளலாம்' என்று ஆசை காட்டினான்.

'உன் ஆதிக்க வெறியைவிட எங்கள் தேசபக்தி மிகவும் உறுதியானது ' என்பது போன்றிருந்தது வெள்ளைச்சாமி அப்போது அவனைப் பார்த்த பார்வை.

'போர்க் கைதியை நடத்தும் மரபறியாதவனே! சுதந்திர தாகத்தின் உணர்வை நீ எப்படி அறிய முடியும்?' என்று சீறினான் வெள்ளைச்சாமி.

அவ்வளவு உறுதியுடன் விளங்கிய அவனிடம் தன் ஜம்பம் ஒன்றும் சாயாது என்று உணர்ந்த பானர்மன்,' பாஞ்சைப் பதியைத் தகர்க்குமாறு தன் கூலிப்படைகளுக்கு கட்டளையிட்டான்.

கோட்டை கொத்தளங்களுடன் வீரம் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த பாஞ்சாலங்குறிச்சியை, இடித்துத் தகர்த்துச் சுடுகாடாக்கின கும்பினிப்படைகள்.

கட்டபொம்மனையும் அவன் வீரர்களையும் தப்பிச் செல்ல விட்டுவிட்ட அவமானமும் அதனால் விளைந்த ஆத்திரமும் கும்பினிப்படைகளை வாட்டின.

பாஞ்சை பாழானபின்னரும், கணக்கற்ற கொடுமைகளுக்குள்ளானான் வெள்ளைச்சாமி. ஆயினும் அவன் வாய்திறந்து எதுவும் சொல்லவே இல்லை.

இறுதியாக, அவ் வீர மறவனை இராமநாதபுரச் சீமையிலுள்ள காளையார் கோயில் என்ற ஊருக்குக் கொணர்ந்து அங்குள்ள சிவன் கோயிலின் முன்னர் நின்ற புளிய மரத்திலே தூக்கிலிட்டனர்.

அவன் இறந்தான்; தன் தங்கை வாழ்விற்காகத் தன் வாழ்வைப் பலியிட்டான்; ஆனால் அதற்கு முன்னரே அவளும் அவள் காதலனும் உலகை விட்டுப் போய்விட்டனர் என்பதை அவன் அறியான்.

இவ்வாறாக, நாட்டுப் பற்றும் நல்லெண்ணமும் பொதுநல மனப்பான்மையுங் கொண்டு புகழ்மிகு

செல்வங்களாக விளங்கிய இளைஞர்கள் பலர் அந்நாளிலே யாகவுணர்வினால் திரண்டெழுந்து ஏகாதிபத்தியத்தின் கொடுமைக்குப் பலியாயினர் எனபதைக் கூறுகின்றது பாஞ்சாலங்குறிச்சிச் சரித்திரம்.

14. நிலைபெற்ற புகழ்

வெளியே சென்ற கட்டபொம்முவும் அவர் தம்பியரும் வீரர்களும் அங்கிருந்துசிவகெங்கைச் சீமைக்குத்தப்பிச் சென்றனர். அங்கே சிலர் அவர்கட்கு ஆதரவளித்தனர். வீராவேசத்துடன் பல நாட்கள் போராடிய பின்னர் 'பகைவனுக்குப் பணிந்து வாழோம்' எனப் பறைசாற்றிய அவ் வீர மரபினர் அனைவருமே தத்தம் உடலை நீத்து மக்கள் உள்ளங்களிலே நிலைபெற்றனர்.

நெல்லை மாவட்டத்திலே இன்றும் பாஞ்சாலங்குறிச்சி மண்ணின் பெருமையைப் பற்றிப் பல பல கதைகள், நாட்டுப் பாடல்கள் முதலியன வழங்குகின்றன. வெள்ளை ஏகாதிபத்தியம் கட்டபொம்முவையும் அவர் வீரர்களையும் கொன்று குவித்து மகிழ்ந்தாலும், தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களை விட்டு அவர்கள் என்றென்றும் நீங்காது நிலைபெற்று வாழ்கின்றனர்.

வீர மறவன் வெள்ளையத்தேவனும் அவன் காதலியும் கண்ட ஆசைக் கனவுகள் மண்ணோடு மண்ணாகி அழிந்த போதிலும் அவர்கள் செய்த தியாகம் நம் உள்ளங்களில் நிலைபெற்றுவிட்டது.

விடுதலை பெற்று, நல்வாழ்வு நோக்கி, நாடு முன்னேறிச் செல்லும், இந்நேரத்தில் அவர்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இளைஞர்கள் உள்ளத்தில் ஆண்மையையும் கடமையுணர்வையும் நாட்டுப் பற்றையும் வளர்க்க உதவும் என்பதை யாருமே மறுக்க முடியாது.

12:517 7L60,
N54

அவ்வாறே பாஞ்சைப் பதியும் வரலாற்றுப் புகழ் மிக்க நினைவுச் சின்னங்களில் ஒன்ருக நிலவுகின்றது. ஓட்டப் பிடாரத்தை யடுத்துள்ள அவ்வூரினை நெருங்கும் போது நம்மையுமறியாமல் நம் உள்ளங்களில் ஒருவகை உயிர்ப்பும் ஊக்கமும் பரவுவதைக் காணலாம்.

சீரும் சிறப்பும் பெற்றிருந்த அப் பழைய கால நினைவுகளால், நம் சிந்தைகளை நிரப்புகின்றன ஒவ்வொரு செடியும் மரமும் பிறவும். தியாகச் செம்மல்களின் புனித இரத்தஞ் சிந்திய மண்ணை மிதிக்கும்போது நாம் எண்ணும் எண்ணங்கள் கணக்கில. அப் புனித பூமியை உரிமையுடன் காத்துநின்ற உத்தமர்களின் நினைவுகள் நம்மை அப்படியே ஆட்கொண்டுவிடுகின்றன.

கட்டபொம்மனுக்கோ வெள்ளையத் தேவனுக்கோ அங்கு வீரக் கல்லோ நினைவு மண்டபமோ இல்லை. எனினும் காற்றும் மண்ணும் பிறவும் அப் பாழடைந்த நிலத்தையே நினைவுச் சின்னமாக நம் கண்முன் காட்டிக் கதை பேசுகின்றன.

இவ்வாருக, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அட்டகாசத்தை எதிர்த்து அமர நிலை பெற்ற வெள்ளையத்தேவன் கட்டபொம்மன் முதலியோரின் கனவுகள் நனவாக மாறுவதற்கு அதன் பின்னரும் ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு மேல் கழிந்தன.

அவ் வீர மரபினரின் தியாக மரணத்தை எண்ணித் தலை தாழ்த்தி வணக்கஞ் செலுத்தி, சோர்வையும் தளர்வையும் ஒழித்து, நாடு வளம்பெற ஆவன செய்வோமாக!

112113